***உள்ளடக்கம்***


| | |
|---|---|
| அறிமுகம் | 3 - 5 |
| நோக்கு, செயற்பணி, நிறுவன ஒழுங்கமைப்பு | 6 - 7 |
| பிரதான எதிர்பார்ப்புக்கள், பிரதான உபாயமுறையிலான அபிவிருத்தி நோக்கங்கள் | 8 - 9 |
| பதவியணி விபரம் (2016.12.31) | 10 - 16 |
| சர்வதேச தினக் கொண்டாட்டங்கள் | 17 - 18 |
| **பிரிவு அடிப்படையிலான செயலாற்றுகை** | |
| நிருவாகப் பிரிவு | 19 - 20 |
| கணக்குகள் பிரிவு | 21 - 22 |
| உள்ளக கணக்காய்வுப் பிரிவு | 23 - 24 |
| திட்டமிடல் பிரிவு | 25 - 27 |
| அபிவிருத்திப் பிரிவு | 28 - 29 |
| இலங்கை மகளிர் பணியகம் | 30 - 34 |
| தேசிய மகளிர் குழு | 35 - 37 |
| சிறுவர் செயலகம் | 38 - 49 |

*சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சின்*

*2016 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை*

*2012 செப்தெம்பர் 12 ஆம் திகதிய*

*அரசாங்க நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 402 இன்*

*அறிவுரைகளுக்கு அமைய தயார் செய்யப்பட்டுள்ளது.*

**அறிமுகம்**

இலங்கையிலுள்ள பெண்கள் மற்றும் சிறுவர் பரம்பரையின் வளர்ச்சிக்காக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2015.09.21 ஆம் திகதிய 1933/13 ஆம் இலக்க அதிவிசேட வாத்தமானி அறிவித்தலின் மூலம் பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணிகளை அமுல்படுத்துவதற்கு ஏற்புடையவாறு அமைச்சுக்கு விசேட செயற்பணி பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

சிறுவர் உரிமைகள் பற்றிய பிரகடனம், பெண்களுக்கு எதிரான சகல வகையிலுமான துன்புறுத்தல்களையும் ஒழித்தல் பற்றிய பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெண்கள் சம்பந்தமான சமவாயத்தை அடிப்படையாகக் கொண்டு சிறுவர் மற்றும் பெண்களின் உரிமைகளை உறுதி செய்தல், பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தவற்கான சட்டங்களைத் தயார் செய்தல், கொள்கைகளைத் தயார் செய்தல், நிகழ்ச்சித்திட்டங்களை வழிநடாத்தல் ஆகிய பணிகள் அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களினால் வெற்றகரமாக அமுல்படுத்தப்பட்டுள்ளன.

சிறுவர்கள் மற்றும் பெண்கள் தொடர்பான சட்டங்கள், கொள்கைகளை வகுப்பதற்கு பங்களிப்பு செய்தல், உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, மகளிர் மற்றும் சிறுவர் உரிமைகளை மேம்படுத்துவதற்கான அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டங்களை மேம்படுத்தல், அவை தொடர்பான பின்னாய்வை மேற்கொள்ளல் மற்றும் எதிர்காலக் கொள்கை வகுப்புக்கு பங்களிப்பு செய்வதற்கான ஆராய்ச்சிகளை நடாத்துதல், சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்கின்ற தரவுக் கட்டமைப்பொன்றை தயார் செய்தல் என்பன 2016ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட பிரதான பணிகளாகும்.

இதற்கமைய 2016 ஆம் ஆண்டில் கிராமிய பொருளாதார அபிவிருத்திக்காக அமுல்படுத்துகின்ற கருத்திட்டங்களுக்கு கிடைக்கின்ற ஏற்பாடுகளில் 25 சதவீதத்தை பெண்களுக்கென ஈடுபடுத்துவதற்கும் துன்புறுத்தலினால் பாதிக்கப்படுகின்ற பெண்களுக்கு பாதுகாப்பை செய்து கொடுப்பதற்கான தற்காலிக இல்லங்களை பேணி வருவதற்குரிய வழிகாட்டல் தொகுப்பு, பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களுக்கான தேசிய திட்டம், முன்பள்ளிப்பருவ அபிவிருத்தி நிலையங்கள் (பாலர் பாடசாலைகள்) உள்ள பிள்ளைகளின் போஷாக்கு நிலைமையை மேம்படுத்துவதற்காக மிகவும் பயன்மிக்கதொரு முறையியலை பிரேரித்தல், இலங்கை சிறுவர்களுக்கான தேசிய செயல் திட்டம் 2016-2020 ஆகிய விஷேட கொள்கைகளுக்கு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சிறுவர் மகளிர் அபிவிருத்தி அலகுகளை வலுவூட்டல் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்களையும் பெண்களுக்கெதிரான துன்புறுத்தல்களையும் தடுப்பதற்கான நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகம், மகளிர் அரவணைப்பு நிலையங்களை நிர்மாணிக்கும் நடவடிக்கைளும் இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**நோக்கு**

சிறுவர் மற்றும் மகளிர் உரிமைகள் பாதுகாக்கப்பட்ட பெறுமைமிகு தேசத்தை நோக்க

**செயற்பணி**

பெறுமைமிகு தேசத்துக்காக சமூக பொருளாதாரத்தை வலுவூட்டல், சமூகப் பெறுமானங்களை மேம்படுத்தல் மற்றும் சம்பந்தப்பட்ட சகல தரப்பினர்களினதும் உபாய முறையிலான கூட்டு பங்கேற்பை பெற்றுக்கொள்வதன் மூலம் சிறுவர் மற்றும் மகளீர் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக நல்லாட்சி பயன்பாடுகளை உறுதிப்படுத்தக் கூடியவாறான ஏற்புடைய தேவைப்பாடுகளை தயார் செய்தல் மற்றும் கொள்கைகளை தயார் செய்தல், அமுல்படுத்தல் மற்றும் ஒழுங்குறுத்தல்

## நிறுவன ஒழுங்கமைப்பு



## பிரதான எதிர்பார்ப்புக்கள்

- சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்திக்கான தேசிய கொள்கையைத் தயார் செய்தல்.
- பெண்கள் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்திக்கான தேசிய திட்டத்தைத் தயார் செய்தல்.
- சிறுவர் மற்றும் பெண்களின் அபிவிருத்திக்கான பொறிமுறையைத் தயார் செய்து அமுல்படுத்தத் தேவையான வசதிகளை செய்துகொடுத்தல்.
- அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள், வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையை ஒருங்கிணைப்புச் செய்து சிறுவர் மற்றும் பெண்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- சிறுவர் மற்றும் பெண்களின் பாதுகாப்புக்கும், அபிவிருத்திக்குமான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- அமைச்சு மற்றும் அதற்குரித்தான பிரதிநிதித்துவ நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை கண்காணிப்புச் செய்தல்.
- சிறுவர்கள் மற்றும் பெண்கள் தொடர்பாக செயற்படுவதற்கு இலங்கை கட்டுப்பட்டுள்ள சகல சர்வதேச பிரகடனங்கள் மற்றும் இணக்கப்பாடுகளுக்குமான சட்டங்கள், கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களைத் தயார் செய்தல்.
- சிறுவர் துஷ்பிரயோகத்தை ஒழிப்பதற்குத் தேவையான சட்டரீதியான மற்றும் தேசிய கொள்கைகளை உள்ளடக்கிய சூழலொன்றைத் தாபித்தல்.

## உபாயமுறையிலான அபிவிருத்தி நோக்கங்கள்

1. உயர்தரம்மிக்க முன்பள்ளிப்பருவ அபிவிருத்தி மற்றும் அரவணைப்புச் சேவையை உறுதிசெய்தல்.
2. சிறுவர் இல்லங்களிலுள்ள சிறுவர்களின் நலன்புரிக்கான உரிமைகளை உறுதி செய்வதும், அவர்களை சமூகமயப்படுத்துவதும்.
3. சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதும், குறைப்பதும்.
4. பாதுகாப்பற்ற பெண்களின் குடும்பங்களை அபிவிருத்தி செய்தல்.
5. சிறுவர்கள் மற்றும் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டங்கள் மற்றும் கொள்கைசார் தலையீடுகள்.
6. இலங்கை கட்டுப்பட்டுள்ள சர்வதேச சமவாயங்களுக்குப் பொருத்தமான உள்ளூர் சிறுவர் மற்றும் பெண்கள் அபிவிருத்தி உபாயமுறைகளைத் தாபித்தல்.

## 2016.12.31 ஆம் திகதிக்கான பதவியணியினர்

| தொடர் இல. | பதவி | சேவை | தரம் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | தற்போது காணப்படுகின்ற பதவியணி |
|---|---|---|---|---|---|
| **சிரேஷ்ட மட்டம்** | | | | | |
| 01. | செயலாளர் | இ.நி.சே. | | 01 | 01 |
| 02. | இராஜாங்க செயலாளர் (சிறுவர்) | இ.நி.சே. | (விசேட) | 01 | 01 |
| 03. | மேலதிக செயலாளர் (நிருவாகமும், நிதியும்) | இ.நி.சே. | (விசேட) | 01 | 01 |
| 04. | மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) | இ.நி.சே. | (விசேட) | 01 | 01 |
| 05. | சிரேஷ்ட உதவிச் செயலாளர் | இ.நி.சே. | SL-1 | 01 | 01 |
| 06. | பிரதம கணக்காளர் | இ.க.சே. | SL-1 | 01 | 01 |
| 07. | பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் | இ.க.சே. | SL-1 | 01 | 01 |
| 08. | பணிப்பாளர் (அபிவிருத்தி) | இ.நி.சே. | SL-1 | 01 | 01 |
| 09. | பணிப்பாளர் (இலங்கை மகளிர் பணியகம்) | இ.நி.சே. | SL-1 | 01 | 01 |
| 10. | பணிப்பாளர் (திட்டமிடல்) | இ.தி.சே. | SL-1 | 01 | 01 |
| 11. | கணக்காளர் | இ.க.சே. | SL-11/111 | 02 | 02 |
| 12. | பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் | இ.நி.சே. | SL-11/111 | 05 | 05 |
| 13. | பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) | இ.தி.சே. | SL-11/111 | 02 | 02 |
| 14. | உதவிச் செயலாளர் | இ.நி.சே. | SL-1 11/111 | 02 | 02 |
| 15. | பிரதிப் பணிப்பாளர் (ITC) | இ.த.தொ.சே. | 1 வகுப்பு 111 தரம் | 01 | 01 |
| 16. | உதவிச் செயலாளர் | இ.நி.சே. | 111/11 | 01 | 01 |
| 17. | சட்ட அலுவலர் | திணைக்கள | 111/11 | 03 | 03 |
| | **மூன்றாம்நிலை மட்டம்** | | | | |
| 18. | நிருவாக அலுவலர் | அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை (சிறப்புத்தரம்) | MN-07 | 01 | 01 |
| 19. | ஆராய்ச்சி அலுவலர் | திணைக்கள | MN-06 | 01 | 01 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 20. | மொழிபெயர்ப்பாளர் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) | மொழிபெயர்ப்பாளர் சேவை | MN-06 | 02 | 01 |
| 21. | ஆலோசனை அலுவலர் | திணைக்கள | MN-05 | 13 | 10 |
| | **இரண்டாம் நிலை மட்டம்** | | | | |
| 22. | அபிவிருத்தி உதவியாளர் | இணைந்த சேவைகள் | MN-04 | 24 | 22 |
| 23. | மகளிர் அபிவிருத்தி உதவியாளர் | திணைக்கள | MN-04 | 335 | 282 |
| 24. | வரவு செலவுத்திட்ட உதவியாளர் | இணைந்த சேவைகள் | MN-04 | 01 | 01 |
| 25. | அபிவிருத்தி உதவியாளர் | அபிவிருத்தி உதவியாளர் சேவை | MN-04 | 516 | 336 |
| 26. | நூலகர் | நூலகர் சேவை | MN-03 | 01 | - |
| 27. | அரச முகாமைத்துவ உதவியாளர் | அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை (1இ11இ111) | MN-02 | 40 | 32 |
| 28. | நூலக உதவியாளர் | திணைக்கள | MN-01 | 01 | 01 |
| 29. | வரவேற்பு அலுவலர் | திணைக்கள | MN-01 | 01 | 01 |
| 30. | நிவாரணச் சகோதரி | திணைக்கள | MN-01 | 134 | 124 |
| 31. | விடுதி பொறுப்பாளர் | திணைக்கள | MN-01 | 02 | - |
| 32. | விடுதி பொறுப்பாளர் (உதவியாளர்) | திணைக்கள | MN-01 | 02 | - |
| 33. | த.தொ. ம. தொ. உ. | த.தொ.ம. தொ.உ. | MT-01 | 03 | 02 |
| 34. | நிழற்படப் பிடிப்பாளர் | திணைக்கள | MT-01 | 01 | 01 |
| 35. | வீடியோ ஒளிப்படப்பிடிப்பாளர் | தற்காலிக | MT-01 | 01 | 01 |
| | **ஆரம்ப மட்டம்** | | | | |
| 36. | சாரதி | இணைந்த சாரதி சேவை | PL-03 | 31 | 24 |
| 37. | புகைப் படக் கலைஞரின் உதவியாளர் | தற்காலிக | PL-01 | 01 | 01 |
| 38. | அலுவலக சிற்றூழியர் | அலுவலக சிற்றூழியர் | PL-01 | 25 | 20 |
| 39. | ஆலோசனைச் சேவை தொழிலாளி | திணைக்கள | PL-01 | 12 | 11 |
| 40. | சமையற்காரர் | திணைக்கள | PL-01 | 02 | - |
| | | | | | |
| | **சிறுவர் செயலகம்** | | | | |
| 41. | பணிப்பாளர் | இ.நி.சே. | SL-1 1 | 01 | 01 |
| 42. | உதவிப் பணிப்பாளர்/பிரதிப் | இ.நி.சே. | SL- | 04 | 04 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பணிப்பாளர் | | 11/111 | | |
| 43. | முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி உதவியாளர் | அ.அ.சே. | MN-04 | 373 | 327 |
| 44. | அரச முகாமைத்துவ உதவியாளர் | அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை (1இ11இ111) | MN-02 | 03 | 01 |
| 45. | சாரதி | இணைந்த சாரதி சேவை | விசேட | 02 | 01 |
| 46. | அலுவலக உதவியாளர் | அ.உ.சே. | விசேட | 03 | 03 |

## சர்வதேச தினக் கொண்டாட்டங்கள்

### சர்வதேச மகளிர் தினம்

**தொனிப்பொருள் - "பலம்மிகு பெண் - நிலைபேறான எதிர்காலம்"**

2016 சர்வதேச மகளிர் தினம் மார்ச் மாதம் 8 ஆம் திகதி மேன்மைதங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் தலைமையில் மகளிர் மற்றும் சிறுவர் விவகாரங்கள் அமைச்சர் கௌரவ சந்ராணி பண்டார அவர்களின் பங்கேற்புடன் வரலாற்று முக்கியத்துவமிக்க திகாமடுல்ல அம்பாறை வீரசிங்க மைதானத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இந்த வைபவத்தை முன்னிட்டு பெண்களின் உற்பத்திகளை விற்பனை செய்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தும் வகையில் உற்பத்திகளுக்கான வர்த்தகக் கண்காட்சியும் நடாத்தப்பட்டது. மேலும் ஆலோசனை சேவையை சமூகமயப்படுத்தல், மகப்பேற்று சம்பந்தமான சாய்சாலை, தொற்றாத நோய்கள் சம்பந்தமாக விளிப்புணர்வூட்டும் சாய்சாலைகள், ஆயர்வேத சாய்சாலை மற்றும் சர்வதேச மகளிர் தின தேசிய வைபவத்தை முன்னிட்டு நாடு முழுவதிலுமுள்ள 137 பிரதேச செயலாளர் பிரிவு செயலகங்களில் பெண்களை பொருளாதார ரீதியாக வலுவூட்டுவதற்கான பல நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்பட்டன.

### உலக சிறுவர் தினம்

**"தொனிப்பொருள் - அழகிய சிறுவர் உலகத்தை பாதுகாக்க பெரியவர்களே கை கொடுங்கள்"**

2016 ஆம் ஆண்டில் உலக சிறுவர் தின தேசிய வைபவம் சிறுவர் இராஜாங்க அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்டது. இது கேகாலை புனித ஜோசப் மகளிர் ஆரம்பக் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் வெகு விமர்சையாக நடாத்தப்பட்டது. இந்த வைபவத்தை முன்னிட்டு பிரதேச செயலக மட்டத்தில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களும் பாலர் பாடசாலை மாணவர்களுக்கான பல்வேறு களியாட்ட நிகழ்ச்சித் திட்டங்களும் ஒழுங்கு செய்யப்பட்டன.

### சர்வதேச சிறுமியர் தினம்

ஒக்டோபர் மாதம் 11 ஆம் திகதி கொண்டாடப்படுகின்ற இந்த சர்வதேச தினத்தை முன்னிட்டு "மகளே உங்களுக்கு சுதந்திரமான உலகம் தேவை. பாதுகாப்பான சூழலை பூர்த்தி செய்வதற்கு நாம் உங்களுக்கு கைகொடுக்கின்றோம்." எனும் தொனிப்பொருளின் கீழ் நடாத்தப்பட்ட இதன் தேசிய வைபவம் 2016.10.11 ஆம் திகதி பண்டார நாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் மு.ப. 9 மணி முதல் பி.ப.12.30 வரை நடாத்தப்பட்டது. இதனை முன்னிட்டு "பாலியல் நடவடிக்கை களுக்கு விருப்பம் தெரிவிக்கும் வயதை 16 ஆகவும் விவாகம் செய்வதற்கான வயதை 18 ஆகவும் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளமை தொடர்பான விடயங்கள் பற்றிய ஒரு திறந்த கலந்துரையாடல் பி.ப. 1 மணி முதல் பி.ப. 4 மணி வரை அமைச்சின் செயலாளரின் தலைமையில் நடாத்தப்பட்டது.

## பிரிவு அடிப்படையிலான செயலாற்றுகை

### நிருவாகப் பிரிவு

### பிரதான செயற்பணிகள்

01. அமைச்சின் பதவியணியினர் தொடர்பான தாபன நடவடிக்கைகள், ஒருங்கிணைப்பு மற்றும் ஒழுக்காற்றுப் பணிகளை பேணிவருதல்.
02. அமைச்சுக்கென அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவிகளில் ஏற்படுகின்ற வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளல்.
03. அமைச்சின் கருத்திட்டங்கள் மற்றும் பணிகளை நிறைவேற்றத் தேவையான புதிய பதவிகளை நி.பி. 71 இற்கு அமைய ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
04. அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 6/2006 இற்கு அமைய திணைக்களப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் ஒழுங்குமறைகள் பதவி உயர்வு ஒழுங்குமுறைகளின் திருத்தங்களை தயார் செய்து அங்கீகரித்துக் கொள்ளல் மற்றும் பதவி உயர்வு முறையியலை அமுல்படுத்தல்.
05. அமைச்சுக்கு உரித்தான பிரிவுகள் மற்றும் நிறுவனங்களுடன் தொடர்புகளைப் பேணி பாராளுமன்ற வினாக்களுக்கான விடைகளை பெற்றுக்கொடுத்தல் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட பணிகளை மேற்கொள்ளல். (வரவு செலவுத்திட்ட குழுநிலை, கணக்குகள் குழு, பொது மனுக்குழு, ஒத்திவைப்பு வேளை மீதான பிரேரணைகள் பற்றிய நடவடிக்கைகள்)
06. அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் தொடர்பாக அமைச்சரவை அலுவலகத்துடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
07. மக்களின் குறைகள் தொடர்பாக சனாதிபதி அலுவலகம் மற்றும் பிரதமர் அலுவலகத்துடன் ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்ளல்.
08. அமைச்சர் அலுவலகம் மற்றும் பிரதி அமைச்சர் அலுவலகத்துக்கு உரித்தான பதவியணியினரின் தாபன நடவடிக்கைகள்.
09. தபால்களை பிரிவுகளுக்கு விநியோகிப்பதும், வெளியே அனுப்பும் கடிதங்களை தபால் மூலம் அனுப்புவதும்.
10. வழங்கல் மற்றும் சேவைகளைப் பேணிவருதல் (பாதுகாப்பு, துப்பரவேற்பாடு, மின்சாரப் பட்டியல்கள், நீர்ப் பட்டியல்கள், செய்திப்பத்திரிகைகள், போக்குவரத்து வசதிகள், தொலைபேசி, புகையிரத ஆணைச்சீட்டு, புதகையிரத பயணச்சீட்டுக்கள், உபசரணை நடவடிக்கைகள், வாகனக் காப்புறுதி)
11. வாகனக் குழுமத்தைப் பேணிவருதல், வாகனங்களை அகற்றல், புதுப்பித்தல் மற்றும் புதிய வாகனங்களைக் கொள்வனவு செய்தல்.
12. கட்டிடங்கள் மற்றும் உபகரணங்களின் பராமரிப்புப் பணிகள்.
13. முற்பணக் கடன், உற்சவ முற்பணம், விசேட முற்பணம், இடர் கடன், ஆதனக் கடன் மற்றும் அக்ரஹார காப்புறுதித் திட்டத்தின் தாபன நடவடிக்கைகள்.
14. பியகம மகளிர் செவண விடுதியைப் பேணிவருதல்.
15. அமைச்சின் பதவியணியினருக்கான தாபன மற்றும் நிதி நடவடிக்கைகள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.
16. அமைச்சின் வழங்கல் நடவடிக்கைகள்.

## ➢ இணை நிறுவனங்களின் தாபன நடவடிக்கைகள்

அமைச்சின் கீழ் இயங்கி வருகின்ற நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை ஆகிய நிறுவனங்களின் நிருவாக நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் வழிகாட்டுவது தொடர்பாகவும் நிருவாகப் பிரிவு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மேற்படி நிறுவனங்களுக்கு அ.நி.சு. 6/2006இற்கு அமைய ஆட்சேர்ப்பு ஒழுங்குவிதிகளை திருத்தியமைத்தல், பதவியணிக்கான பதவிகளை ஏற்படுத்தல், நியமனம் செய்தல், பதவி உயர்வு, பதவியணியினரின் சேவைசார் சிக்கல்கள் தொடர்பாக அமைச்சிடம் சமர்ப்பிக்கப்படுகின்ற முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறே இந்த நிறுவனங்களின் அலுவலர்களின் வெளிநாட்டு சுற்றுலாக்கள், புலமைப் பரிசில்கள், பயிற்சிப் பாடநெறிகள் போன்றவற்றுக்கு அங்கீகாரம் வழங்கல் மற்றும் உரியவாறு லீவு அங்கீகரிப்பதும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ➢ உற்பத்தித்திறன் மேம்படுத்தல் நடவடிக்கைகள்

வினைத்திறன்மிக்க பொதுச் சேவை மற்றும் நற்புறவான, மனங்கவர் அலுவலக வளவை ஏற்படுத்துவதற்காக அமைச்சு உற்பத்தித்திறனை மேம்படுத்தும் நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வந்துள்ளது. மேலும் உற்பத்தித்திறன் செயலகத்தினால் நடாத்தப்படுகின்ற தேசிய உற்பத்தித்திறன் விருது வழங்கும் போட்டியிலும் கலந்துகொண்டதுடன், இதன் போது மூன்றாவது இடத்தை வென்றெடுக்க முடிந்தது

## கணக்குகள் பிரிவு

### பிரதான பணிகள்

நிதி விடயம் தொடர்பாக திறைசேரியுடன் முறையான ஒருங்கிணைப்பை ஏற்படுத்திக்கொண்டு மேற்படி திட்டங்களை அமுல்படுத்தும் நடவடிக்கைகள், கருத்திட்டங்கள் உள்ளடங்களாக அமைச்சின் கணக்குகள், கொடுப்பனவு நடவடிக்கைகள் தொடர்பில் பொதுத் திறைசேரியின் அரசாங்க கணக்குகள் மற்றும் திறைசேரி நடவடிக்கை திணைக்களங்களுக்கு தேவையான தகவல்களை தயார் செய்தல், அமைச்சின் வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டு முற்பண "டீ" கணக்கு மதிப்பீடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீடு என்பவற்றை உரிய நேரத்தில் தயார் செய்து தேசிய வரவு செலவு திட்ட திணைக்களத்திடம் சமர்ப்பித்தல், அமைச்சின் கீழ் காணப்படுகின்ற திணைக்கள கருத்திட்டங்கள் மற்றும் நியாயாதிக்க நிறுவனங்களின் வருடாந்த வரவு செலவு திட்டம் மற்றும் குறைநிரப்பு மதிப்பீடுகளை தயார் செய்வதை ஒருங்கிணைப்பு செய்தல், அமைச்சு உள்ளடங்களாக அதன் கீழ் காணப்படுகின்ற அனைத்து நிறுவனங்களினதும் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகளை திறந்து வைத்தல், அவற்றை இயங்கச் செய்தல், மூடிவிடுவது தொடர்பான நடவடிக்கைகள் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு செயற்படு மூலதன திட்டத்தை தயார் செய்தல் மற்றும் கட்டுநிதி பற்றிய முன்மதிப்பீடு, மதிப்பீடு பற்றிய கூற்றை தயார் செய்தல் மற்றும் திறைசேரி நடவடிக்கை திணைக்களத்திடம் சமர்ப்பித்தல், ஒட்டுமொத்த வரவு செலவுத் திட்ட ஏற்பாடுகளையும் முகாமைத்துவம் செய்தல், பல்வேறு கருத்திட்டங்கள் உள்ளடங்களாக ஏனைய நிறுவனங்களுக்கு திட்டமிட்டு கற்கை நிதியை விடுவித்தல், வெளிநாட்டு உதவி கருத்திட்டங்கள் தொடர்பிலான நிதி சார் கட்டுப்பாடு, வருடாந்த ஒதுக்கீட்டு கணக்கு, முற்பண கணக்கு, வைப்புக் கணக்கு மற்றும் கருத்திட்டங்களின் இறுதிக் கணக்குகளை சமர்ப்பித்தல், அமைச்சு தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்காய்வு வினாக்களுக்கு பதில் அனுப்புதல், வருடாந்த களஞ்சிய பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

### ஒதுக்கீட்டுக் கணக்கு 2016

செலவுத் தலைப்பு - 120 - சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சின் 2016 ஆம் ஆண்டுக்கான 2016.12.09 ஆம் திகதிய 252/2016ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள டிஜிஎஸ்ஏ 1 மாதிரிப் படிவத்திலிருந்து 10 ஆவது மாதிரிப் படிவம் வரையான மாதிரிப்படிவங்களும், குறிப்பு (i) முதல் குறிப்பு (iv) (அ) மற்றும் (ஆ) வரையான தகவல்களின் பொழிப்புரையுடன் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆகிய உறுப்புரைகள், 2016 இன் 23 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட 2014 இன் 47 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம் மற்றும் வேறு நியாயாதிக்க ஏற்பாடுகளுக்கும், 2016 இன் வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டின் 2014 இன் திருத்தியமைக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டுக்கும் அமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை உள்ளடக்கியதாக அரசாங்க நிதி மற்றும் நிருவாக ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக தயார் செய்து உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

## 2016 ஆம் ஆண்டின் நிதிசார் முன்னேற்றம்

| நிகழ்ச்சித்திட்ட இலக்கம் | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டை ஒதுக்கம் | நி.பி. 66 மற்றும் 69 இற்கு அமைவான மாற்றல்கள் | தேறிய ஒதுக்கம் | மொத்தச் செலவினம் | நிகழ்ச்சித்திட்ட இலக்கம் |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| | <u>மீண்டெழும்</u> | | | | | |
| 1 | செயற்பாட்டு நடவடிக்கைகள் | 625,130,000 | 1,500,000 | 3,235,000 | 629,865,000 | 551,373,284 |
| 2 | அபிவிருத்தி நடவடிக்கைகள் | 8,048,355,000 | 133,900,000 | 3,235,000 | 8,179,020,000 | 6,381,362,338 |
| | உபமொத்தம் (மீண்டெழும்) | 8,673,485,000 | 135,400,000 | 0 | 8,808,885,000 | 6,932,735,622 |
| | <u>மூலதனம்</u> | | | | | |
| 1 | செயற்பாட்டு நடவடிக்கைகள் | 73,300,000 | 109,213,315 | | 182,513,315 | 128,532,064 |
| 2 | அபிவிருத்தி நடவடிக்கைகள் | 711,310,000 | 198,896,812 | | 910,206,812 | 406,829,532 |
| | உபமொத்தம் (மூலதனம்) | 784,610,000 | 308,110,127 | 0 | 1,092,720,127 | 535,361,596 |
| | மொத்தம் | 9,458,095,000 | 443,510,127 | 0 | 9,901,605,127 | 7,468,097,218 |

## செலவினங்களை நிதியீட்டல்

| | | நிகழ்ச்சித்திட்டம் 1 | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|
| குறியீடு | குறியீட்டு விபரம் | தேறிய ஏற்பாடு | உண்மைச் செலவினம் | தேறிய ஏற்பாடு | உண்மைச் செலவினம் | சேலவின விகிதம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | % |
| 11 | உள்ளூர் நிதி | 812,378,315 | 679,905,348 | 812,378,315 | 679,905,348 | 84 |
| | மொத்தம் | 812,378,315 | 679,905,348 | 812,378,315 | 679,905,348 | 84 |

| | | நிகழ்ச்சித்திட்டம் 2 | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|
| நிகழ்ச்சித்திட்ட இலக்கம் | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டை ஒதுக்கம் | நி.பி. 66 மற்றும் 69 இற்கு அமைவான மாற்றல்கள் | தேறிய ஒதுக்கம் | மொத்தச் செலவினம் | நிகழ்ச்சித்திட்ட இலக்கம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 11 | உள்ளூர் நன்கொடை | 8,501,270,000 | 6,660,120,389 | 8,501,270,000 | 6,660,120,389 | 78 |
| 12 | வெளிநாட்டு கடன் | 473,500,000 | 6,185,523,569 | 473,500,000 | 6,185,523,569 | 24 |
| 13 | வெளிநாட்டு உதவி - கொடை | 112,456,812 | 39,644,194 | 112,456,812 | 39,644,194 | 35 |
| | மொத்தம் | 9,087,226,812 | 12,885,288,152 | 9,087,226,812 | 12,885,288,152 | 78 |

**அரசாங்க ஊழியர்களின் முற்பண பி கணக்கு**

| **விபரம்** | **உச்ச செலவின எல்லை ரூபா** | **ஆகக் குறைந்த பெறுகை எல்லை ரூபா** | **உச்ச வரவு மீதி எல்லை ரூபா** |
|---|---|---|---|
| ஒதுக்கீட்டுச் சட்டம் மூலம் தத்துவமளிக்கப்பட்ட வரையறைகள் | 30,000,000.00 | 18,000,000.00 | 85,000,000.00 |

## உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

**பிரதான பணிகள்**

- அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் நிதிசார் மற்றும் தாபன நடவடிக்கைகளை கணக்காய்வு செய்வதும், அறிக்கையிடுவதும்.
- தவறுகள் மற்றும் மோசடிகளைத் தடுப்பதற்காக அமைச்சினுள் அமுல்படுத்தப்பட்டுள்ள கட்டுப்பாட்டு முறைகள் வெற்றிகரமானதாக உள்ளதா என்பது பற்றி ஆராய்தல் மற்றும் அது பற்றிய அவதானிப்புகளையும், சிபாரிசுகளையும் சமர்ப்பித்தல்.
- அமைச்சின் கணக்குகள் மற்றும் வேறு அறிக்கைகளின் நம்பகத்தன்மையை ஆராய்தல், அமைச்சின் சொத்துக்கள் சகல வகையிலுமான நட்டங்களிலிருந்தும் உச்சளவில் பாதுகாக்கப்பட்டுள்ளதா என்பதை ஆராய்ந்து பார்ப்பதும், அறிக்கையிடுவதும்.
- அமைச்சின் கீழுள்ள பிரிவுகளில் பின்வரும் நடவடிக்கைகள் தொடர்பான முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்காக மூன்று (03) மாதங்களுக்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்தல்.

    - வருடாந்த செயற்றிட்டத்தை அமுல்படுத்துவதன் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தும், பலவீனமான செயலாற்றுகையைத் தவிர்த்துக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளைச் சமர்ப்பிப்பதும்.
    - கணக்காய்வாளரினால் வெளியிடப்படுகின்ற கணக்காய்வு வினாக்கள் / கணக்காய்வு அறிக்கைகளுக்கான பதில்களை சமர்ப்பித்தல்.
    - வருடாந்த வழங்கல் திட்டத்தை அமுல்படுத்தல்.
    - வருடாந்த அறிக்கைகள் / செயலாற்றுகை அறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.
    - வருடாந்த இருப்புக் கணிப்பீட்டை நடாத்தல்.
    - அபிவிருத்தி மற்றும் உள்ளக நிருவாக நடவடிக்கைகள்.

- அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களின் வருடாந்த செயற்றிட்டங்களுக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தாமதம் ஏற்படுவதற்குக் காரணமாகியுள்ள சிக்கல்களை கணக்காய்வு செய்வதும், அறிக்கையிடுவதும்.

2016 ஆம் ஆண்டு தொடர்பாக முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு குழுக் கூட்டம், முதலாவது காலாண்டுக்கு 2016.04.28 ஆம் திகதியும், இரண்டாவது காலாண்டுக்கு 2016.07.22 ஆம் திகதியும், மூன்றாம் காலாண்டுக்கு 2016.10.17 ஆம் திகதியும், நான்காவது காலாண்டுக்கு 2016.12.27 ஆம் திகதியும் நடாத்தப்பட்டது.

| 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு வினாக்கள் பற்றிய விபரம் | | |
|---|---|---|
| 01. | 2015 ஒக்டோபர் மாதம் செலுத்தப்பட்ட உறுதிச் சீட்டுக்களின் பரிசோதனை | 2016.01.13 |
| 02. | சுவ திவ்யட போசன நிகழ்ச்சித்திட்டம் - 2015 | 2016.01.22 |
| 03. | பியகம வனிதா சக்தி மன்றத்தை பரிசீலித்தல் - 2015 | 2016.01.22 |
| 04. | கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 20000 ரூபா பெறுமதியான போசாக்குப் பொதியை வழங்குதல் | 2016.01.24 |
| 05. | 2015 நவம்பர் மாதம் செலுதப்பட்ட உறுதிச் சீட்டுக்களின் பரிசோதனை | 2016.02.08 |
| 06. | உள்ளகக் கணக்காய்வுப் பரிசோதனை- வங்கி இணக்கக் கூற்று- 2016 ஜனவரி | 2016.02.29 |
| 07. | 2015 டிசம்பர் மாதம் செலுத்தப்பட்ட உறுதிச் சீட்டுக்களின் பரிசோதனை | 2016.03.29 |
| 08. | கந்தளாய் மகளிர் சக்தி மன்றத்தின் கணக்குகளை கணக்காய்வு செய்தல் | 2016.03.29 |
| 09. | தேசிய மகளிர் குழுவினால் 2015 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் பற்றிய கணக்காய்வு வினாக்கள் | 2016.04.01 |
| 10. | மகளிர்களுக்கான காந்தா செவன விடுதி - பியகம | 2016.04.05 |
| 11. | உள்ளக கணக்காய்வு பரிசோதனை - இணக்கக் கூறறுஇ 2016 பெப்ரவரி | 2016.04.05 |
| 12. | விடுமுறை பிரயாணச்சீட்டு (அரசாங்க ஊழியர்களுக்கான இலவச புகையிரத பயணச்சீட்டுக்கள்) 2015 | 2016.04.05 |
| 13. | தேசிய சிறுவர் அபிவிருத்தி நிதியம் | 2016.05.23 |
| 14. | சிறுவர் செயலகத்துக்கென இணையத்தளம் ஒன்றை வடிவமைத்தல் | 2016.05.24 |
| 15. | உள்ளகக் கணக்காய்வுப் பரிசோதனை- வங்கி இணக்க கூற்று- 2016 ஏப்ரல் | 2016.05.27 |
| 16. | வங்கி இணக்க அறிக்கை 2016 - நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் | 2016.06.16 |
| 17. | அரசாங்க அலுவலர்களின் முற்பண “டீ” கணக்கு பரிசோதனை - 2015 | 2016.06.16 |
| 18. | 2015 ஆம் ஆண்டின் சம்பள பதிவேட்டுக்கமைய கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டுள்ள அலுவலகர்களின் சுயவிபரக்கோவையை பரிசீலித்தல் | 2016.06.29 |

| | | |
|---|---|---|
| 19. | 2015 ஆம் ஆண்டில் சம்பளப் பதிவேடுகளுக்கமைய கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டுள்ள அலுவலர்கள் பற்றிய பரிசோதனை | 2016.06.29 |
| 20. | முற்பணம் தீர்க்காமை | 2016.07.27 |
| 21. | உள்ளகக் கணக்காய்வுப் பரிசோதனை- வங்கி இணக்க கூற்று- 2016 ஜுன் | 2016.07.27 |
| 22. | பரத்த சிறுவர் விடுதி – நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் | 2016.08.01 |
| 23. | 2015 டிசம்பர் மாதம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டுக்களை பரிசீலித்தல் - நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் | 2016.08.15 |
| 24. | கெபகரு தெகுரு பெற்றோர் பாதுகாவலர் புலமைப்பரிசு நிகழ்ச்சித் திட்டம் 2016 - முன்னேற்ற மீளாய்வு | 2016.09.02 |
| 25. | முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி கருத்திட்டம் பற்றிய பரிசோதனை | 2016.10.19 |
| 26. | அபேக்சா கடன் நிதியம் - குருநாகல் மாவட்டம் | 2016.11.07 |
| 27. | சுழல் கடன் நிதியம் - களுத்துறை மாவட்டம் | 2016.11.10 |
| 28. | முன்பள்ளிப்பருவ அபிவிருத்தி கருத்திட்டம் பற்றிய பரிசோதனை – வளங்கள் செயன்முறை | 2016.11.23 |
| 29. | புரிகல்பன சித்திரப் போட்டி - 2016 | 2016.11.28 |

## திட்டமிடல் பிரிவு

**பிரதான செயற்பணிகள்**

01. அமைச்சின் அனைத்துப் பிரிவுகள் மற்றும் திணைக்களங்களையும் ஒருங்கிணைப்புச் செய்து அடுத்தகட்டத் திட்டங்களைத் தயார் செய்தல்.

02. அமைச்சின் அனைத்துப் பிரிவுகள் மற்றும் திணைக்களங்களையும் ஒருங்கிணைப்புச் செய்து முன்னேற்ற அறிக்கைகளைத் தயார் செய்தல்.

03. திட்டமிடல் பிரிவு சம்பந்தமான ஊடக நடவடிக்கைகளை ஊடகப் பிரிவுடன் இணைந்து மேற்கொள்ளல், தகவல்களைப் பகிந்தளித்தல் மற்றும் ஒருங்கிணைப்பு.

04. அரச சார்பற்ற அமைப்புக்களுடன் நடாத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்வதும் முன்னேற்றத்தை அறிக்கையிடுவதும்.

05. அமைச்சைப் பிரதிநிதித்துவம் செய்து முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் மற்றும் அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களாக நடாத்தப்படுகின்ற பல்வேறு வைபவங்களை ஒழுங்கு செய்வதும், அவற்றை வெற்றிகரமாக்கிக் கொள்வதும்.

06. பல்வேறு சமூக உபசரணைச் சேவைகளுக்குப் பங்களிப்பைப் பெற்றுக்கொடுத்தல்.

07. அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், செயற்பாடுகள் மற்றும் பின்னாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் (தேசிய/மாவட்ட/பிரதேச மட்டத்திலான பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்).

08. திட்டமிடல் பிரிவு சம்பந்தமான அடிப்படை விடய ரீதியான தகவல்களைச் சேகரிப்பதும் இற்றைப்படுத்துவதும்.

09. ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு முன்னேற்ற அறிக்கைகளையும் திட்டங்களையும் பெற்றுக்கொடுத்தல்.

**2016 ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்**

- 2016 ஆம் ஆண்டுக்கு மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சுக்காக வருடாந்த செயற்திட்டம் தயார் செய்யப்பட்டதுடன் இதனை அடிப்படையாகக் கொண்டு மாவட்ட ஒருங்கிணைந்த 25 திட்டங்கள் தயார் செய்யப்பட்டன. மேற்படி திட்டங்கள் தொடர்பாக சகல மாவட்டங்களுக்கும் அமைச்சினால் இணைப்பு செய்யப்பட்டுள்ள வெளிக்கள அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டு மாவட்ட செயலாளர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டன.

- இலங்கை பிள்ளைகளின் உரிமைகள் மற்றும் அரவணைப்பை உறுதி செய்யும் நோக்குடன் தேசிய மற்றும் சர்வதேச இணக்கப்பாட்டுக்கமைய தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் இணைந்த அனுகுமுறையுடன் அமுல்படுத்துவதற்கு சிறுவர்களுக்கான 5 வருட செயற்திட்டத்திற்கு (2016-2020) தற்போது அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

- மேன்மைதங்கிய ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் ‘‘பிள்ளைகளைப் பாதுகாப்போம்’’ எனும் விஷேட தேசிய திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இதன் மூலம் குறுங்கால மற்றும் நீண்டகால அடிப்படையில் இலங்கையிலுள்ள சிறுவர்களுக்கு பாதுகாப்பான சமூகத்தை உருவாக்க நோக்கமாக கொள்ளப்பட்டுள்ளது. பிள்ளைகளுக்காக இயங்கி வருகின்ற ஏனைய அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களுடன் இணைந்து 2016-2018 காலப்பகுதியில் அமுல்படுத்தப்படுகின்ற இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் சிறுவர் உரிமைகளை பாதுகாக்கக் கூடிய சூழலை உருவாக்க எதிர் பார்க்கப்படுகின்றது.

- இலங்கை முழுவதிலும் பரவலாக இடம்பெறுகின்ற சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களுக்கு காரணமான விடயங்கள் பற்றி ஆராய்வது மற்றும் அவற்றுக்கு தீர்வு பெற்றுக் கொடுப்பதை நோக்காகக் கொண்டு சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுப்பது பற்றிய உபாய முறையிலான செயற் திட்டம் (2016-2018) இது அமுல்படுத்தப் படுகின்றது. இதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் ஏற்கனவே கிடைத்துள்ளதுடன் 3 மாத அடிப்படையில் முன்னேற்றங்களும் கண்காணிப்பு செய்யப்படுகின்றது.

**02.முன்னேற்ற மீளாய்வு**

இந்த அமைச்சுக்கு வருடாந்தம் ஒதுக்குகின்ற மட்டுப்படுத்தப்பட்ட நிதி ஏற்பாடுகள் - நிதியை விளைதிறன்மிக்கவாறு உச்ச அளவில் பயன்படுத்துவதை அடைந்து கொள்வதற்காக தொடர்ச்சியான முன்னேற்ற மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆதற்கமைய 2016 ஆம் ஆண்டு முன்னேற்ற மீளாய்வுகள் பின்வருமாறு மேற்கொள்ளப்பட்டது.

1. வருடாந்த செயற் திட்டத்திற்கமைய முதலாவதுஇ இரண்டாவது மற்றும் மூன்றாவது காலாண்டுகளின் முன்னேற்ற அறிக்கைகளை தயார் செய்தல்.

2. வருடாந்த செயற் திட்டத்திற்கமைய காலாண்டு முன்னேற்றங்கள் பற்றி கலந்துரையாடுவதற்கு சகல துறைகளினதும் தலைவர்களுடன் 2 கூட்டங்கள் நடாத்தல்.

3. 2016 முதலாவதுஇ இரண்டாவது மற்றும் மூன்றாவது காலாண்டுக்கான முன்னேற்றங்கள் தொடர்பில் ழுடெடைநெ முன்னேற்ற அறிக்கைகள் மூன்றை தயார் செய்தல்.

4. அரசாங்க பொருளாதார கொள்கை பிரகடணத்தின் காலாண்டு முன்னேற்ற அறிக்கைகளை தயார் செய்தல்.

மகளிர் மற்றும் சிறவரகள் அலுவல்கள் அமைச்சு நாடு முழுவதிலும் மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் அமுல்படுத்துகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் உச்ச அளவான விளைதிறனையும் வினைத்திறன்மிக்க சேவையையும் பயனாளிகளுக்கு பெற்று கொடுப்பதை அடைந்து கொள்வதற்காக 2016ஆம் ஆண்டு முதல் அமைச்சின பதவியணி அலுவலர்கள் நேரடியாக ஒவ்வொரு மாவட்டம் தொடர்பிலுமான பொறுப்பையும் வகிக்கக் கூடிய வகையில் விஷேட நிகழ்ச்சித்திட்டம் ஒன்று அமுல்படுத்தப்பட்டுள்ளது.

25 மாவட்டங்களுக்கும் ஒவ்வொரு மாவட்டத்துககென மாவட்ட ஒருங்கிணைப்பு பதவி நிலை அலுவலர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார் என்பதுடன் ஆகக்குறைந்தது ஒரு வருடத்துக்குள் 2 தடவையேனும் குறித்த மாவட்டத்தின் முன்னேற்ற மீளாய்வை மேற்கொண்டு அறிக்கையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும். இந்த நிகழ்ச்சித்திட்டம் தற்போது மிக வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டு வருவதுடன் மேலும் இந்த செயன்முறையை வலுவூட்டும் பொருட்டு 25 மாவட்டங்களிலும் மாவட்ட வெளிக்கள அலுவலர்கள் சகலருக்கும் முன்னேற்ற மீளாய்வு மற்றும் திறன் அபிவிருத்திக்கான 2 நாள் நிகழ்ச்சித்திட்டம் ஒன்று கொழும்பில் நடாத்தப்பட்டது. அதனூடாக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம் பற்றி ஆராயப்பட்டதுடன் அமுல்படுத்தும் போது எழுகின்ற சிக்கல்கள் - தேவை களை இனங்கண்டு அவற்றை தவிர்த்துக் கொள்வதற்கான ஆலோசனைகளும் பெற்றுக்கொடுக்கப்பட்டன.





தலாஹேன முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தின் விஷேட சந்தர்ப்பங்கள்

## அபிவிருத்திப் பிரிவு

**பிரதான செயற்பணி**

அமைச்சின் நோக்கை யதார்த்தமாக்கிக் கொள்ளும் அபிலாஷையை அடைந்து கொள்வதற்காக அமைச்சின் சகல நிறுவனங்கள் மற்றும் பிரிவுகள் மற்றும் ஐக்கிய நாடுகளின் அனுசரணை நிறுவனங்கள் உள்ளடங்களாக ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்கள் சம்பந்தமான கருத்திட்டங்களின் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்குரிய கொள்கைகளை தயார் செய்தல்இ நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைப்பு செய்து தேசிய மட்டத்திலான அபிவருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

## அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களும் முன்னேற்றமும்

- 2016 ஆம் ஆண்டில் தீ திரிய காந்தா நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 50,000,000.00 50,000,000.00 ஆன ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் ஆண்டின் இறுதியில் நிதி சார் முன்னேற்றம் ரூபா 33,702,478.03 ஆகும். அதற்கமைய 67% ஆன நிதி சார் முன்னேற்றம் அடையப் பெற்றுள்ளது.

- 2016 ஆம் ஆண்டில் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கெதிரான துன்புறுத்தலை தடுக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 66,376,000.00 ஆன ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டதுடன் ஆண்டின் இறுதியில் நிதி சார் முன்னேற்றம் ரூபா 37,581,499.86 ஆகும். இதற்கமைய 75% ஆன நிதி சார் முன்னேற்றம் அடையப் பெற்றுள்ளது.

- 2016 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் கீழ் ரூபா 6,500,000.00 ஆன ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டதுடன் ஆண்டின் இறுதியில் நிதி சார் முன்னேற்றம் ரூபா 690,313.00 ஆகும்.

- 2016 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிதியத்தின் கீழ் ரூபா 12,906,812.00 ஆன தொகை ஒதுக்கப்பட்டதுடன் ஆண்டின் இறுதியில் நிதி சார் முன்னேற்றம் ரூபா 11,415,307.00 ஆகும்.

**மேற்படி நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் அமுல்படுத்தப்பட்ட விஷேட கருத்திட்டங்கள்**

- **பிரதேச செயலகங்களில் சிறுவர் மற்றும் மகளிர் அலகுகளைத் தாபித்தல்**

சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்திக்கான பொறிமுறையை அமுல்படுத்த தேவையான வசதிகளை செய்து கொடுப்பதற்காக இந்த அலகுகளை பிரதேச செயலகங்களில் தாபிக்கம் பணி 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. சிறுவர்கள் மற்றும் பெண்கள் தொடர்பாக அரசாங்கத்தினால் அமுல்படுத்துகின்ற நிகழ்ச்சித் திட்டங்களை பிரதேச செயலாளர் மட்டத்தில் சிறந்த ஒருங்கிணைப்பு மற்றும் பிரதேச செயலாளர்களின் நெருங்கிய கண்காணிப்பின் கீழ் பேணி வருவதற்காக பிரதேச செயலகங்களில் சிறுவர் மற்றும் மகளிர் விடயம் தொடர்பான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பு செய்வதன் மூலம் விணைத்திறனும் விளை திறனும்மிக்க சேவையை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டு இந்த ஆண்டில் ரூபா மில்லியன் 6.245 செலவிடப்பட்டுள்ளது.

- **ஊடகங்களினூடாக விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்**

இலங்கை சன சமூகத்தில் பெண்கள் பற்றிய நல்லெண்ணத்தை நல்ல முறையில் கட்டியெழுப்புவதற்காக அழுத்தம் கொடுக்கும் பொருட்டு ஊடகங்கள் பல்வேறு துறைகளில் தமது செயற்பணியை நிறைவேற்றி வருகின்றன. பால் நிலை சார் சமூக அந்தஸ்து, சம அந்தஸ்தை உறுதிப்படுத்தல் மற்றும் அரசியல் துறையில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல்இ பெண்களுக்கெதிராக இடம்பெறுமகின்ற பல்வேறு துன்புறுத்தல்கள், வன்முறைகளை ஒழித்தல் மற்றும் சிறுவயது பெண் பிள்ளைகள் கர்ப்பமடைவதை ஒழிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் குறுந்திரைப்படங்களை தயார் செய்தல் மற்றும் துண்டுப் பிரசுரங்களை வடிவமைப்பது இதன் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக 2016 ஆம் ஆண்டில் ரூ.மி. 1.325 செலவிடப்பட்டுள்ளது.

- **தகவல் தொழிநுட்ப அலகு மற்றும் மகளிர் தரவுக் கட்டமைப்பு**

மகளிர் தரவுக் கட்டமைப்புக்கு தேவையான தகவல்கள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றத்தை பிரதேச மட்டத்தில் கணனி மயப்படுத்துவதற்காக பிரதேச செயலகங்களில் உள்ள வெளிக்கள அலுவலர்களுக்கு கணனித்துறை பற்றிய முறையான பயிற்சியை பெற்றுக் கொடுத்தல் மற்றும் அது சம்பந்தமான பணிகளுக்கு சம்பந்தப்பட்ட ஏனைய பணிகளுக்கும் 2016 ஆம் ஆண்டில் ரூ.மி.3.716 ஆன தொகை செலவிடப்பட்டுள்ளது.

- **வெளிக்கள அலுவலர்களுக்கு கணனிப் பயிற்சியை பெற்றுக் கொடுத்தல்**

தரவுக் கட்டமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களை தொடர்ச்சியாக இற்றைப்படுத்துவது ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் இருக்கின்ற மகளிர் அபிவிருத்தி அலுவலர்களின் மூலம் நிறைவேற்றுவது எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்காக அவர்களுக்கு தேவையான கணனி இயந்திரங்கள் உள்ளடங்களாக அலுவலக உபகரணங்களும் மேற்படி தரவுகளை கணனியில் உட்புகுத்த தேவையான கணனிப் பயிற்சியும் மாவட்ட மட்டத்தில் அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது.

- **பால் நிலை சார் அடிப்படையிலான சமூக அந்தஸ்தை பிரதானப்படுத்தல் மற்றும் பெண்களின் உரிமைகள் தொடர்பில் சமூகத்தை உணர்பூர்வமானதாக மாற்றுதல்**

பால்நிலை சார் சமூக அந்தஸ்தை பிரதானப்படுத்தல் மற்றும் பெண்களுக்கெதிராக இடம்பெறுகின்ற துன்புறுத்தல் செயற்பாடுகள் காரணமாக பெண்கள் எதிர்நோக்கியுள்ள அசௌகரியமான நிலையிலிருந்து அவர்களை விடுவித்தல் மற்றும் அவ்வாறான பெண்கள் தொடர்பில் காணப்படுகின்ற பல்வேறு தவறான கருத்துக்கள் பாரபட்சம் காட்டல் போன்றன தொடர்பில் சமூகத்தை உணர்வு பூர்வமாக்கும் நோக்கத்துடன் இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள், விரிவுரைகள் மற்றும் செயலமர்வுகள் மற்றும் இசை நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கத்தை சமூகமயப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- **சுற்றாடல் சுற்றுலாத் துறைக்கு பெண்களை ஊக்குவித்தல்**

பெண்களை பொருளாதார ரீதியாக வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சுற்றாடல் மற்றும் சுற்றுலா கைத்தொழில் துறையில் பெண்களை பொருளாதார ரீதியில் வலுவூட்டுவதற்காக சூழலுக்கு சாதகமான சுற்றாடல் சுற்றுலா வியாபாரத் துறையுடன் சம்பந்தப்பட் டுள்ள கிராமிய பெண்களின் வருமானத்தை வளர்த்தல் மற்றும் அவர்களை தொழில்வாய்ப்புகளில் ஈடுபடுத்தல், உள்நாட்டு மூலப்பொருட்களை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படுகின்ற புதிய உள்நாட்டு மருந்துகள், உள்நாட்டு கலாசார அம்சங்களை மேம்படுத்தல்இ சேதனப் பசளையை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படுகின்ற பயிர்ச் செய்கையை பிரபல்யப்படுத்துவதன் மூலம் வருமான உருவாக்க நிகழ்ச்சித் திட்டங்கள் இதன் மூலம் அமுல்படுத்தப்படுகின்றன. இதனூடாக மிகவும் குறைந்த வருமான மட்டத்தில் வாழும் பெண்களின் உற்பத்திகளை பிரபல்யப்படுத்துவதும் ஊழிய சுரண்டல், பெண்களுக்கெதிரான வன்முறை போன்ற சுற்றுலாக் கைத்தொழிலுடன் சம்பந்தப்பட்டதாக எழுகின்ற சிக்கல்களை தவிர்த்துக் கொள்வதற்கும் இந்த புதிய கருத்திட்டம் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போது முன்னோடி கருத்திட்டமொன்றாக அநுராதபுரம் புனித பூமியை மையமாகக் கொண்டு மத்திய நுவரகம் பலாத பிரதேச செயலாளர் பிரிவில் இது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- **பெண்களுக்கு சாதகமான மற்றும் உதவியளிக்கும் மாதிரிக்கிராம நிகழ்ச்சித்திட்டம்**

இதன் கீழ் மகாவிலச்சியஇ வெலிகந்த, ரிதிமாலியத்தஇ யடவத்த மற்றும் கோறளைப்பற்று தெற்கு (கிரான்) ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 5 கிராமங்கள் மாதிரிக் கிராமங்களாக அபிவிருத்தி செய்யப்பட்டன.

- **மகளிர் அரவணைப்பு நிலையங்களை நிர்மாணித்தல்**

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மருதங்கேணிஇ முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுரை பற்றுஇ மட்டக்களப்பு மாவட்டத்தில் மன்முனை வடக்கு, இரத்தினபுரி மாவட்டத்தில் இரத்தினபுரி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள முவகமவில் அமைந்துள்ள கொளின்கேஸ்ட் அரசாங்க உத்தியோக பூர்வ வாசஷ்தலம் ஆகிய இடங்களில் நிர்மானிக்கப்பட்டுள்ள நிலையங்களின் எஞ்சியிருந்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டன.

➢ **பொலிஸ்இ சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தை தாபித்தல்**

சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கெதிரான துன்புறுத்தலை தடுப்பதற்காக பொலிஸினால் நிறைவேற்றப்படுகின்ற செயற்பணியை வலுவூட்டும் பொருட்டு 2014ஆம் ஆண்டில் பொலிஸ்இ சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தை தாபிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. மேற்படி விஷேட கருத்திட்டத்தில் எஞ்சியுள்ள நடவடிக்கைகள் இந்த ஆண்டு நிறைவு செய்யப்பட்டன.

**இலங்கை மகளிர் பணியகம்**

**நோக்கு**

இலங்கை சனசமூகத்துக்கு மதிநுட்பமுடைய உணர்வுபூர்வமான நம்பிக்கைமிக்க பெண்கள் சமுதாயத்தை உருவாக்கும் தேசிய நிறுவனமாக மாறுதல்

**செயற்பணி**

தமது அறிவையும் பலத்தையும் உச்சளவிலும் நல்ல முறையிலும் பயன்படுத்தி சுயபலத்தின் மூலம் சவால்களை எதிர்கொள்கின்ற இலங்கை பெண்கள் சமுதாயத்திற்கு உகந்த சூழலை உருவாக்குவதற்கு முறையான ஒழுங்கமைப்பு சட்டகத்தின் ஊடாக திட்டமிடப்பட்ட அறிவைப் பெற்றுக்கொடுத்து மேற்கொள்ளப்படுகின்ற சமூக, பொருளாதார வலுவூட்டல்களின் ஊடாக அரசாங்க கொள்கைகளுக்கு அமைய பெண்களின் அபிவிருத்திக்காக செயற்படுகின்ற தேசிய பொறிமுறையாக மாற்றமடைதல்.

## நோக்கங்கள்

01. பொருளாதார, சமூக, அரசியல் மற்றும் கலாசாரம் போன்ற துறைகளில் இலங்கை பெண்களுக்குச் சமமான உரிமைகளை அனுபவிப்பதற்கான வாய்ப்புக்களைச் செய்து கொடுத்தல்.
02. பெண்களாக உள்ளதன் காரணமாக பல்வேறு துறைகளிலும் தற்போது எதிர்நோக்கி வருகின்ற தடைகளை நீக்குவதற்காக அவர்களை வலுவூட்டல்.
03. பெண்களுக்குச் சமமான உரிமைகள் மற்றும் சமவாய்ப்புக்களை உறுதி செய்ய வேண்டிய துறைகளை இனங்காணல், அதற்குத் தேவையான அரசாங்க கொள்கைகளைத் தயார் செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் அதற்கான பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

## பிரதான செயற்பணிகள்

- இலங்கைப் பெண்களை பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் வலுவூட்டுவதற்காக பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை இனங்காணல், திட்டமிடல், அமுல்படுத்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- சகல வயதுப் பிரிவுகளையும் சேர்ந்த பெண்களின் விசேட அம்சங்களை இனங்கண்டு அவர்களுக்கு உகந்தவாறு நாட்டின் ஒட்டுமொத்த அபிவிருத்தியின் பங்காளர்களாக மாற்றுவதற்குரிய நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- பெண்களாக இருப்பதனால் அவர்கள் எதிர்நோக்குகின்ற சமூக அசௌகரியங்களைத் தவிர்ப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- சமூகத்தில் விசேட காரணங்களினால் பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ள பெண்களுக்கான விசேட நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- ஒட்டுமொத்த பெண்கள் சமுதாயத்தினதும் அறிவு, திறமை மற்றும் கருத்துக்களை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- பெண்களுக்கு ஒரே அமைப்பின் கீழ் செயற்படுவதற்காக சமுதாய அடிப்படையிலான மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை பெண்களை ஒரே வலையமைப்பின் கீழ் ஒழுங்குபடுத்தல்.

## நிகழ்ச்சித்திட்ட கட்டமைப்பு

### பொருளாதார ரீதியாக வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள்

விதவைகள் மற்றும் பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்களை பொருளாதார ரீதியாக வலுவூட்டல்.

கால்நடை வள நிகழ்ச்சித் திட்டம்

வருமான உருவாக்க வழிமுறைகளுக்கு ஊக்குவிக்கும் நிகழ்ச்சித் திட்டம்

பெண்களின் உற்பத்திகளுக்கான கண்காட்சியும் சந்தைவாய்ப்பும்

சுழல் கடன் நிகழ்ச்சித் திட்டம்

வனிதா சக்தி மன்றம்

வெளிநாடு செல்ல உத்தேசித்துள்ள பெண்களை இந்த நாட்டிலேயே பொருளாதார ரீதியா வலுவூட்டல்

திரிய தேதட சவிய எனும் மீனவப் பெண்களை வலுவூட்டல்

### சமூக ரீதியாக வலுவூட்டல்

மகளிர் அரவணைப்பு நிலையங்களைப் பேணி வருதல்.

ஆலோசனை நிலையங்களைப் பேணி வருதல் மற்றும் சமுதாயத்தை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

பால் நிலை சார் அடிப்படையிலான துன்புறுத்தலை தடுப்பதற்காக சமுதாயத்தை விழிப்புணர்வூட்டல்.

“ஆரோக்கியமான வாழ்க்கைக்கு போஷாக்கு சுவ திவியட போசனய” எனும் போசாக்கு நிகழ்ச்சித்திட்டம்.

தோட்டப்புற பெண்களுக்கான நிதி முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்.

இளம் யுவதிகளின் வாழ்க்கைத்திறன் மற்றும் இனப்பெருக்க சுகாதாரம் பற்றிய நிகழ்ச்சித்திட்டம்.

மகளிர் அமைப்புக்களின் வலையமைப்புக்களை வலுவூட்டல்

சிறைச்சாலைகளிலுள்ள பெண்களை சமூக ரீதியாக வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள்.

சர்வதேச மகளிர் தினம் மற்றும் சிறுமியர் தினத்தை முன்னிட்டு நடாத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள்.

### வேறு நிகழ்ச்சித் திட்டங்கள்

மாவட்ட முன்னேற்ற மீளாய்வும் பின்னாய்வு நடவடிக்கைகளும்.

அலுவலர்களின் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்.

ஊடகப்பிரச்சாரம் மற்றும் நூலகத்தைப் பேணி வருதல்.

**அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களும் முன்னேற்றமும்**

இந்த ஆண்டில் காந்தா சவிய (மகளிர் பலம்) நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா.35,000,000 வரவு செலவு திட்ட மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டதுடன் ஆண்டின் இறுதியில் நிதி சார் முன்னேற்றம் ரூபா.34,306,539.79 ஆகும். அதற்கமைய நிதி சார் முன்னேற்றம் 98% அடையப் பெற்றுள்ளது.

**பொருளாதார ரீதியாக வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள்**

- விதவைகள் மற்றும் பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்களை பொருளாதார ரீதியாக வலுவூட்டல்.

  இலங்கை சமூகத்தில் விதவைகளான மற்றும் தொழிலற்று இருக்கின்ற பெண்கள், குடும்பத்துக்கு தலைமை தாங்கும் பெண் தலைமைத்துவம் கொண்ட குடும்பங்களை பொருளாதார ரீதியாக வலுவூட்டல், அவர்களின் சமூக அந்தஸ்தை கட்டியெழுப்பக் கூடிய வகையில் இந்த நிகழ்ச்சித்திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் கீழ் 2016 ஆம் ஆண்டில் 25 பிரதேச செயலாளர் பிரிவுகளில் நேரடிப் பயனாளிகளான 221 பெண்களுக்கு சுய தொழில் வாய்ப்புக்கான உதவிகள் மற்றும் கடனாக ரூபா மில்லியன் 5.0222 ஆன தொகையானது வழங்கப்பட்டுள்ளது.

- கால்நடை வள நிகழ்ச்சித் திட்டம்.

  பசும்பால் பயன்பாட்டின் மூலம் குடும்பத்தில் போசாக்கு, வீட்டுக்கழிவுப் பொருட்களிலிருந்து சேதனப்பசளைகளை உற்பத்தி செய்தல் மற்றும் வீட்டுத்தோட்ட நடவடிக்கைகள், உயிர்வாயு உற்பத்தி, உப வருமான வழிகளின் மூலம் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தல் மற்றும் உள்நாட்டுப்பால் தேவையில் 55% வரை உள்நாட்டிலேயே பெற்றுக்கொள்ளல் மற்றும் ஒரு கிளாஸ் பால் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஆக்கபூர்வமான பங்களிப்பை ஏற்படுத்துவதற்காக இந்த நிகழ்ச்சித் திட்டம் திட்டமிடப்பட்டுள்ளதுடன் பெண்கள் அமைப்புக்களின் அங்கத்தவர்களுக்காக இது அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதன் போது பிரதானமாக பயனாளிகளுக்கு கால்நடை வளர்ப்பு பற்றிய பயிற்சி வழங்கப்படுவதுடன் பயிற்சியின் பின்னர் பசுக்களை பெற்றுக் கொள்வதற்காக சுழல் முறையில் அமுல்படுத்தப்படுகின்றவாறு ரூபா 40000 எனும் உச்ச அளவான கடன் தொகை வழங்கப்படும். அதற்கமைய 2016 ஆம் ஆண்டில் 14 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் 150 பயனாளிகளுக்கென 7 பிரதேச செயலாளர் பிரிவுகளில் அமுல்படுத்தப்பட்டன. பசுக்களை கொள்வனவு செய்வதற்கும் பயிற்சி நிகழ்ச்சி திட்டத்துக்குமென ரூபா மில்லியன் 1.9975 ஆன தொகை செலவிடப்பட்டுள்ளது.

- வருமான உருவாக்க வழிமுறைகளுக்கு ஊக்குவிக்கும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்.

(தொழில் முயற்சி சார் அபிவிருத்திப் பயிற்சி)

வியாபாரம் ஒன்றை ஆரம்பித்தல் மற்றும் பேணி வரத் தேவையான முகாமைத்துவ, தொழில் முயற்சி சார் மற்றும் கணக்கு நடவடிக்கைகள் பற்றிய அறிவை பெற்றுக்கொடுப்பதும் வியாபார நடவடிக்கைகளுக்கு ஊக்குவிப்பதும் இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. இங்கு தேசிய அருங்கலைகள் பேரவை, லக்சல, கைப்பணிக் கைத்தொழில், கைப்பணி ஆக்கங்கள், விவசாய திணைக்களம், விதாதா பயிற்சி நிலையம், பிடவைக் கைத்தொழில் அமைச்சு ஆகிய நிறுவனங்களைச் சேர்ந்த பிரபல பயிற்றுவிப்பாளர்களினால் பயிற்சி வழங்கப்படல், உற்பத்திக்கான மூலப்பொருள் வசதிகளை செய்து கொடுத்தல் மற்றும் விற்பனைக்கான சந்தை வாய்ப்புக்களை அறிமுகம் செய்து கொடுக்கக் கூடிய வகையில் இந்த நிகழ்ச்சித்திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டில் வருமான உருவாக்க வழிமுறைகளுக்கு ஊக்குவிக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் 89 நடாத்தப்பட்டதுடன் பயனாளிகளின் எண்ணிக்கை 4580 ஆகும். நிபுணத்துவ பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 20 பயனாளிகள் 428 பேருக்காகவும், சந்தை வாய்ப்புக்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் விற்பனை காட்சி நிகழ்ச்சித் திட்டங்கள் 24 பயனாளிகள் 1530 பேரை சம்பந்தப்படுத்திக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டங்களுக்கு 2016 ஆம் ஆண்டில் ரூபா மில்லியன் 4.9716 ஆன தொகை செலவிடப்பட்டுள்ளது.

- சுழல் கடன் நிகழ்ச்சித் திட்டம் மற்றும் கணக்குகள் பயிற்சி

முதலீட்டுக்கான ஈடுபடுத்தும் தொகையை மேம்படுத்துவதற்கு மகளிர் அமைப்புக்களில் பதிவு செய்துள்ள அங்கத்தவர்களுக்கு இந்தக்கடன திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. 2016 ஆம் ஆண்டில் ரூ.மி.0.44794 அளவிடப்பட்டதுடன் சுழல் கடன் நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்தும் போது கணக்குப்பதிவு செய்ய வேண்டிய முறையியல்கள் பற்றி பெண்கள் மற்றும் அமைச்சின் கீழ் பிரதேச செயலகங்களுக்கு இணைப்பு செய்யப்பட்டுள்ள அலுவலர்களைப் பயிற்றுவிப்பதும் 2016 ஆம் ஆண்டில் இடம்பெற்றுள்ளது. 12 நிகழ்ச்சித் திட்டங்களைச் சேர்ந்த பயனாளிகள் 827 பேருக்கு இந்த பயிற்சி வழங்கப்பட்டுள்ளதுடன் இதற்காக ரூ.மி.2273 செலவிடப்பட்டுள்ளது.

➢ வெளிநாடு செல்ல உத்தேசித்துள்ள பெண்களை இந்த நாட்டிலேயே பொருளாதார ரீதியாக வலுவூட்டல்

வெளிநாடு செல்ல உத்தேசித்துள்ள பெண்கள் வெளிநாடு செல்வதன் காரணமாக ஏற்படுகின்ற சீரற்ற பெறுபேறுகள் மற்றும் வெளிநாடு செல்வதற்கு பதிலாக உள்நாட்டிலேயே தொழில் வாய்ப்புக்களை அறிமுகம் செய்தல் மற்றும் அதற்காக் பெண்களை ஊக்குவிப்பதற்கு நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. இதற்கு

பெண்களை ஊக்குவிக்கும் பொருட்டு இதன் கீழ் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. 2016 ஆம் ஆண்டு ரூ.மி. 2.3458 செலவிடப்பட்டுள்ளதுடன், 83 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

- "திரிய தேத்தட்ட சவிய" மீனவப்பெண்களை வலுவூட்டல்

மீனவ சமுதாயத்தில் உள்ள பெண்கள் அமைப்புக்களில் உள்ள அங்கத்தவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக திரிய தேத்தட்ட சவிய எனும் மீனவ பெண்களுக்கான நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீன்பிடிக் கைத்தொழிலுக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் உள்நாட்டு மூலப்பொருட்களைப் பயன்படுத்தி உற்பத்திகளை உருவாக்குதல் மற்றும் அதற்கு ஊக்குவிப்பை ஏற்படுத்துவதன் மூலம் மீனவப் பெண்களை சுயதொழில் வாய்ப்புக்களில் ஈடுபடுத்துவதே இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும் என்பதுடன் இதற்கு 2016ஆம் ஆண்டில் ரூபா மில்லியன் 2 செலவிடப்பட்டுள்ளது.

**சமூக ரீதியாக வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள்**

இலங்கைப் பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் அவர்களுக்குப் பெற்றுக்கொடுக்கத் தேவையான வசதிகளை செய்துகொடுப்பது இதன் மூலமம் மேற்கொள்ளப்படுகின்றது. இதன்கீழ்,

01. அரவணைப்பு நிலையங்கள்

சட்டவிரோத ஆட்கடத்தலுக்கு ஆளான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் அவர்களின் பிள்ளைகள் தொடர்பான சிக்கல்களை தீர்த்துவைக்கும் வரை பாதுகாப்பாக தடுத்து வைத்தல் மற்றும் அவர்களுக்கு அரவணைப்பை செய்துகொடுத்தல், ஆலோசனை, சட்ட நடவடிக்கைகளுக்கான வசதிகளை செய்துகொடுத்தல், சுகாதார வசதிகள் மற்றும் அவர்களின் அடிப்படை தேவைகளை பெற்றுக்கொடுத்தல் (உணவு, உடை) போன்றன இந்த நிலையங்களின் மூலம் நிறைவேற்றப்படுகின்ற பணிகளாகும். இந்த அரவணைப்பு நிலையங்கள் 2ஐப் பேணிவருவதற்காக ரூபா மில்லியன் 1.6315 செலவிடப்பட்டுள்ளது.

02. ஆலோசனை நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஆலோசனை நிலையங்கள்

பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு உளவியல் ஆலோசனைகளை வழங்கி அவர்களுக்கு சேவைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆட்கள் மற்றும் நிறுவனங்களிடம் அவர்களை அனுப்பிவைத்தல், வாழ்க்கையில் எழுகின்ற சிக்கல்களை தீர்த்துக் கொள்ளும்போது உளவியல் முறைகளைப் பயன்படுத்த பழக்கப்படுத்துவதற்காக 12 ஆலோசனை நிலையங்களை ஆலோசனை அலுவலர்களின் கீழ் பேணிவருவதுடன் அதற்கு மேலதிகமாக பிரதேச செயலகங்களுக்கு ஆலோசனை உதவி அலுவலர்கள் இணைப்புச் செய்யப்பட்டுள்ளனர். அதன் மூலம் சமூக சிக்கல்களுக்கு தீர்வுகள் மற்றும்

சமுதாயத்தை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. 2016ஆம் ஆண்டில் ஆட்கள் 172 பேருக்கு உளவியல் ஆலோசனை வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன. இதற்காக ரூபா மில்லியன் 1.0695 செலவிடப்பட்டுள்ளது.

03. பால்நிலைசார் அடிப்படையிலான துன்புறுத்தல்கள் மற்றும் ஆட்கடத்தலை தடுப்பதற்கான நிகழ்ச்சித்திட்டம்

பெண்கள் தொடர்பான தேசிய மற்றும் சர்வதேச கொள்கைகள் மற்றும் சமவாயங்கள் சம்பந்தமாகவும் பெண்கள் உரிமைகள் மற்றும் பால்நிலைசார் அடிப்படையில் இடம்பெறுகின்ற துன்புறுத்தல் சந்தர்ப்பங்களை இனங்காண்பதற்கும் அவற்றிலிருந்து விடுதலை பெறுவதற்கும் தேவையான சட்ட ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளும் வழிமுறைகள் சம்பந்தமான அறிவைப் பெற்றுக்கொடுத்தல், ஆட்கடத்தல், ஆட்கடத்தலுக்கு ஆளாகின்ற சந்தர்ப்பங்களை இனங்காணல், பாலியல் சுரண்டல் போன்றன பற்றி பெண்களை விழிப்புணர்வூட்ட இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. பயனாளிகள் 6056 பேருக்காக 60 நிகழ்ச்சித்திட்டங்கள் இந்த ஆட்டில் நடாத்தப்பட்டுள்ளதுடன் இதற்கென ரூபா மில்லியன் 1.4843 செலவிடப்பட்டுள்ளது.

04. ஆரோக்கியமான வாழ்க்கைக்கு போஷாக்கு நிகழ்ச்சித்திட்டம்

எதிர்கால சுகாதார ரீதியில் ஆரோக்கியமிக்க சமுதாயம் ஒன்றுக்கு சுகாதாரம், போஷாக்கு, துப்பரவேட்பாடு பற்றிய அறிவு பெண்களுக்கு அத்தியாவசியாமாகின்றது. இதன்மூலம் ஆரோக்கியமான சமூகம் ஒன்றை தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யும் ஆற்றல் கிடைப்பதுடன் இரசாயப் பொருட்களை பயன்படுத்தாது உணவுகளை உற்பத்திகளை மேற்கொள்ள ஊக்குவிப்பதும் இடம்பெறுகின்றது. 56 நிகழ்ச்சித்திட்டங்கள் 4814 பயனாளிகளுக்காக நடாத்தப்பட்டதுடன் இதற்கென ரூபா மில்லியன் 1.4671 செலவிடப்பட்டுள்ளது.

05. தோட்டத்துறை பெண்களுக்கான நிதி முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்

சமூக, பொருளாதார மற்றும் கலாசார ரீதியில் தோட்டத்துறை பெண்களின் அந்தஸ்தை மேம்படுத்துவதற்காக கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அமுல்படுத்தி போஷாக்கை மேம்படுத்தல், போதைவஸ்து ஒழிப்பு, வெளிநாடு செல்ல எதிர்பார்த்துள்ள தோட்டத்துறை பெண்களுக்கு மாற்று வருமான வழிமுறைகளுக்கு ஊக்குவித்தல், கல்வி, ஆட்கடத்தல், துன்புறுத்தலை குறைப்பதற்கும் தோட்டத்துறை சமுதாயம் வாழும் பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள பயனாளிகள் 5600 பேரை சம்பந்தப்படுத்திக் கொண்டு 50 நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. இதற்கென ரூபா மில்லியன் 1.9998 ஆன தொகை செலவிடப்பட்டுள்து.

06. புதிய யுவதிகளின் வாழ்க்கைத்திறன் மற்றும் இனப்பெருக்க சுகாதார நிகழ்ச்சித்திட்டம்

இளம்பராய யுவதிகளான பெண் பிள்ளைகளின் திறமைகள் மற்றும் அறிவை வளர்ப்பதற்காக பிரதேச செயலாளர் பிரிவுகளில் புதிய இளம்பராய யுவதிகள் 20130 பேரை சம்பந்தப்படுத்திக் கொண்டு 100 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. இதற்கென ரூபா மில்லியன் 1.9867 செலவிடப்பட்டுள்ளது.

07. மகளிர் அமைப்புக்களின் வலையமைப்பை வலுவூட்டல்

பெண்களின் உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் அவர்களின் அபிவிருத்திக்காக குழுவொன்றாக செயற்படுவதற்கான அமைப்புக்களின் வலையமைப்பை உருவாக்குதல் மற்றும் அவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சியளிப்பதற்காக தாபிக்கப்பட்டுள்ள கிராமிய மட்டத்திலான மகளிர் செயல் அமைப்புக்கள், பிரதேச ரீதியான மகளிர் அமைப்புக்கள் மற்றும் மாவட்ட மகளிர் அமைப்புக்களை வலுவூட்டல், உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளடங்கலாக சேவைகளை பெற்றுக்கொடுத்தல். இதற்கென ரூபா மில்லியன் 0.9874 செலவிடப்பட்டுள்ளது.

08. சிறையிலடைக்கப்பட்டுள்ள பெண்களை சமூக ரீதியாக வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள்

சிறிய தவறுகளின் அடிப்படையில் சிறையிலடைக்கப்பட்டுள்ள பெண்கள் மீண்டும் மீண்டும் அதே தவறுகளில் ஈடுபடுவதை தடுத்து நல்ல முறையில் சமூகமயப்படுத்துவதற்காக இந்த நிகழ்ச்சித்திட்டம் சிறைச்சாலைகளில் அமுல்படுத்தப்படுகின்றது. இதன்போது தையல் பாடநெறி மற்றும் கைப்பணி உற்பத்திகள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுகின்றன. பயனாளிகள் 488 பேருக்காக 11 நிகழ்ச்சித்திட்டங்கள் 2011ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டுள்ளன. இதற்கென ரூபா மில்லியன் 0.4974 செலவிடப்பட்டுள்ளது.

09. ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள்

மாவட்ட முன்னேற்ற மீளாய்வு மற்றும் பின்னாய்வு நடவடிக்கைகள், அலுவலர்களின் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், ஊடக பிரச்சாரம் மற்றும் நூல் நிலையங்களை பேணிவருதல் ஆகிய பணிகளும் மிகவும் பெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளதுடன் இதற்காக 2016ஆம் ஆண்டில் ரூபா மில்லியன் 2.2793 ஆன தொகை செலவிடப்பட்டுள்ளது.

## தேசிய மகளிர் குழு

**நோக்கு**

பால்நிலைசார் சமஅந்தஸ்து உறுதி செய்யப்பட்டதும், வன்முறையற்றதுமான பெண்களுக்கு உகந்த ஏற்றதொரு இலங்கைச் சமூகம்

**செயற்பணி**

இலங்கை பெண்களின் உரிமைகளை பாதுகாத்து மேம்படுத்தல், சமஅந்தஸ்தை உறுதிசெய்தல் மற்றும் பூரண அபிவிருத்திக்கு வழிவகுக்கின்ற கொள்கைகள், சட்டக் கட்டமைப்புக்களை தயார் செய்வதற்கான சிபாரிசுகள் மற்றும் உதவிகளைப் பெற்றுக்கொடுப்பதும் முறையாக அமுல்படுத்த ஊக்குவிப்பதும், கண்காணிப்புச் செய்து மதிப்பீடு செய்வதுமாகும்.

**பிரதான செயற்பணிகள்**

- பால்நிலைசார் அடிப்படையில் ஏற்படுகின்ற மாற்றங்கள், வித்தியாசங்கள் தொடர்பான முறைப்பாடுகளை பொறுப்பேற்றல், அவதானித்தல் மற்றும் அது சம்பந்தமாக நிர்வாக, அதிகாரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் அல்லது சபைகளுக்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அவற்றை சமர்ப்பித்தல்.
- பெண்களின் பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை மீறுவது தொடர்பாக கிடைக்கின்ற முறைப்பாடுகள், நிவாரணங்கள், சட்ட உதவிகள் அல்லது இணக்கம் செய்கின்ற சேவைகளுக்காக அரசாங்க அல்லது அரசசார்பற்ற அமைப்புகளிடம் சமர்ப்பித்தல்.
- இந்த செயற்பாடுகளை ஆய்வுசெய்தல், குறித்த நிர்வாக அதிகாரிகளிடமிருந்து வருடாந்த முன்னேற்ற அறிக்கைகளை பெற்றுக் கொள்ளல் மற்றும் அந்த அறிக்கைகளை நாட்டுக்குள் பிரபல்யப்படுத்தல் போன்றவற்றுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பெண்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் விடயத்தில் சட்ட ரீதியான மற்றும் அபிவிருத்திக் கொள்கைகளினால் ஏற்படுகின்ற அழுத்தங்கள், தாக்கங்களை மதிப்பீடு செய்தல்.
- சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிகளை ஊக்குவிப்பதன் மூலம் பிரகடனத்தின் நோக்கங்களை நிறைவு செய்து கொள்ள உதவுவதும் அந்த ஆராய்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு மீள திருத்தியமைப்பதற்கான சிபாரிசுகளை சமர்ப்பித்தலும்.
- பெண்களின் அந்தஸ்து தொடர்பாக விடயப்பொறுப்பு அமைச்சரினால் குழுவின் கவனத்துக்கு கொண்டுவரப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக அல்லது பொருத்தமானதென குழு சிந்திக்கின்றவாறு செயற்படுவதற்கு அறிவுரை வழங்குதல்.

## அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களும் முன்னேற்றமும்

- **சட்ட திருத்த நடவடிக்கைகள் பற்றிய கலந்துரையாடல்களை நடாத்துதல்**

இதற்கென ரூபா 34,405.00 ஆன தொகை செலவிடப்பட்டது.

- **ஊக்குவித்தல், விழிப்புணர்வூட்டல், திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்**

பால்நிலைசார் சமூக அந்தஸ்தை பிரதானப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள், சேவை நிலையங்களில் துன்புறுத்தலை தடுப்பதற்காக முதலீட்டுச்சபை மற்றும் சுதந்திர வர்த்தக வலய நிறுவனங்களில் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல், தோட்டத்துறையில் உள்ள பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல்களை தடுத்தல், இனப்பெருக்க சுகாதாரம் பற்றிய நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் 16 நாள் நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டன. இதற்காக ரூபா 2,222,769.50 செலவிடப்பட்டுள்ளது.

- **கொள்கைகள் மற்றும் ஆராய்ச்சிகள்**

சீடோவ் அறிக்கை பற்றிய ஐக்கிய நாடுகள் அமைப்பினால் சமர்ப்பிக்கப்பட்ட இறுதி அவதானிப்புக்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளல், பீஜிங் செயற்றிட்டத்தை அபிவிருத்தி செய்தல், கல்வியில் பால்நிலைசார் சமூக அந்தஸ்து தொடர்பான ஒரே நிலைத்தன்மையை ஒழித்தல், முறைசாராத்துறை மற்றும் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள பெண்களை பாதுகாப்பது பற்றிய நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் தோட்டத்துறை பெண்களுக்கு இடம்பெறுகின்ற துன்புறுத்தல், சிறுவர் தாய்மார் பற்றி ஆராய்ச்சி, சைபர் குற்றச் செயல்கள் பற்றி ஆராய்ச்சி மற்றும் சிறிய விவசாய உற்பத்தி துறைகளில் (தேயிலை, இறப்பர், தென்னை) சேவையிலீடுபட்டுள்ள பெண்களுக்கு இடம்பெறுகின்ற பாரபட்சம் காட்டல் பற்றிய ஆராய்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளன. இதற்கென ரூபா 1,003,267.00 ஆன தொகை செலவிடப்பட்டுள்ளது.

- **குழுக்கலந்துரையாடல்கள்**

வீட்டுத் தலைமைத்துவம் பற்றிய எண்ணக்கரு, பெண்களும் ஆட்கடத்தலும், முஸ்லிம் சட்டம் மற்றும் அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்பாக அரசியல் கட்சிகளுடனான கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. இதற்கென ரூபா 370,738 ஆன தொகை செலவிடப்பட்டது.

- **ஊடக நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஊடக வெளியீடுகளை அபிவிருத்தி செய்தல்**

முறைப்பாட்டு நிலையத்திற்கு கிடைக்கின்ற முறைப்பாடுகள் தொடர்பாக வானொலி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல், முன்னேற்ற பங்கீடுபாட்டாளர்களின் வருடாந்த சஞ்சிகையை அச்சிடல், வனிதா விபவ காலாண்டு சஞ்சிகையை அச்சிடல், ஊடக வெளியீடுகளை அபிவிருத்தி செய்வதன் கீழ் சிறுவயதில் கர்ப்பமடைவதை குறைப்பதற்கான கையேட்டை அச்சிடுவதும் சேவை நிலையங்களில் இடம்பெறுகின்ற பாலியல் துன்புறுத்தல்களை குறைப்பதற்காக போஸ்டர் ஒன்றை தயார்செய்தல் தயார்செய்தல் மற்றும் சிறுவயதில் கர்ப்பமடைவதினால் ஏற்படக்கூடிய விளைவுகளை ஒழிப்பதற்காக விவரண திரைப்படம் ஒன்று தயார்செய்யப்பட்டது. இதற்கென ரூபா 1,582,876 செலவிடப்பட்டுள்ளது.

- **அரசியலில் பெண்களின் பங்கேற்பை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டங்கள்**

பேராதனை பல்கலைக்கழகத்துடன் இணைந்து சான்றிதழ் பாடநெறி ஒன்றை நடாத்துதல் மற்றும் அரசியலில் பிரவேசிக்க விரும்புகின்ற உள்ளூராட்சி துறைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பெண்களுக்கான திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. இதற்கென ரூபா 1,060,323 ஆன தொகை செலவிடப்பட்டது.

- **1938 எனும் மகளிர் உதவித்தொலைபேசி சேவை மற்றும் முறைப்பாட்டு நிலையத்தை வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள்**

இதன் கீழ் 1938 திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், வழிப்படுத்தல் குழுக்கூட்டங்கள், 1938 மற்றும் முறைப்பாட்டு நிலையத்தின் பிரச்சார நடவடிக்கைகள் மற்றும் 1938 மகளிர் உதவித்தொலைபேசிச்சேவை மற்றும் முறைப்பாட்டு நிலையம் சம்பந்தமான நிறுவனங்களுடன் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டதுடன் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பல நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. மேலும் கொள்கைசார் கலந்துரையாடல்களை நடாத்துவதற்கு மேலதிகமாக வேறு நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்பட்டன. இதற்கென ரூபா 830,703.50 ஆன தொகை செலவிடப்பட்டது.

## சிறுவர் செயலகம்

**நோக்கு**

உடல், உளவியல் சமூக மற்றும் அறிவாற்றல் அபிவிருத்தியைக் கொண்ட இலங்கைச் சமூகமொன்றை உருவாக்குதல்

**செயற்பணி**

தேசிய மட்டத்திலான கேந்திர நிறுவனம் என்ற வகையில் கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்தல், அமுல்படுத்தல், மதிப்பீடு செய்தல், பின்னாய்வின் ஊடாக இலங்கையின் சிறுவர்களின் ஒட்டுமொத்த அபிவிருத்தியை உறுதிசெய்தல்.

**பிரதான நோக்கங்கள்/ செயற்பணிகள்**

- முன்பள்ளிப்பருவ உபசரணை மற்றும் அபிவிருத்தி பற்றிய கொள்கையை தயார்செய்தல், அமுல்படுத்தும் பொறிமுறையாக செயற்படுதல்
- அரச, அரசசார்பற்ற அமைப்புக்கள் மற்றும் தனியார் துறையின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்வதும், வலையமைப்புச் செய்வதும்
- முன்பள்ளிப் பருவ உபசரணை, அபிவிருத்தி தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல், தரவுகளை சேகரித்தல் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்தல்
- முன்பள்ளிப் பருவ சிறுவர்களின் ஒட்டுமொத்த அபிவிருத்தி தொடர்பில் ஏற்புடையதாகின்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை தயார் செய்வதும் அபிவிருத்தி செய்வதும்.
- முன்பள்ளிப் பருவத்தின் முக்கியத்துவம் பற்றி மக்களை அறிவுறுத்தல் மற்றும் அவர்கள் மத்தியில் அது தொடர்பிலான உணர்வுப்பூர்வமான தன்மையை ஏற்படுத்தல்.

# அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களும், முன்னேற்றமும

## விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்

**01 .கர்ப்பிணித் தாய்மாருக்கு ரூபா 20,000ஆன போசாக்குக் கொடுப்பனவை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்**

குறைநிறையுடைய குழந்தைகள் பிறப்பதை இலங்கையில் குறைக்கும் நோக்கத்துடன், பிள்ளைகளை பிரசவிக்கும் ஒவ்வொரு தாய்க்கும் ரூபா -/20,000ஆன போசாக்குக் கொடுப்பனவை வழங்கும் பொருட்டு இந்த நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. மாதமென்றுக்கு ரூபா -/20,000வீதம் 10 மாதங்களில் இந்தக் கொடுப்பனவு பெற்றுக் கொடுக்கப்படுவதுடன், கர்ப்ப காலத்தில் ஒரு தாய்க்குத் தேவையான போசாக்குப் பதார்த்தங்களை கொண்ட உணவுப் பொருட்கள் அடங்கிய போசாக்குப் பொதியாக சுகாதார மருத்துவ அலுவலர் அலுவலகததில் பதிவு செய்துள்ள ஒவ்வொரு கர்ப்பிணித் தாய்க்கும் இந்தக் கொடுப்பனவு (கூப்பன்கள் மூலம்) இந்த ஏப்ரல் மாதம் வரை வழங்கப்பட்டது. எனினும் தாய்மாருக்கு சிபாரிசு செய்யப்பட்ட உணவுப்பொருட்களைக் கொள்வனவு செய்வதை இலகுபடுத்தல் மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதை இலகுபடுத்தும் நோக்கத்துடன், இந்த ஆண்டு மே மாதம் முதல் கூப்பன்களுக்குப் பதிலாக வவுசர்களை வழங்கும் புதிய முறையியல் அறிமுகம் செய்யப்பட்டது. இதன் கீழ் ரூபா 2000 பெறுமதிமிக்க 10 வவுசர்கள் ஒரே தடவையில் பெற்றுக் கொடுக்கப்படும். கர்ப்பகாலத்தின் இறுதி ஆறு மாதங்கள் மற்றும் பாலூட்டும் முதல் 04 மாதங்களுக்கு மேற்படி போசாக்கு உணவுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்த ஆண்டில் இதற்கென ரூ.மி. 7500 ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 2016 ஆம் ஆண்டின் இறுதியில் ரூ.மி. 5,746.413 செலவிடப்பட்டு சுமார் 2,869,465 போசாக்குப் பொதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

**02.பாலர் பாடசாலை மாணவர்களுக்கு ஒரு கிளாஸ் பசும்பால் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்**

2016 ஆம் ஆண்டு இந்த நிகழ்ச்சித்திட்டத்துக்கு பொதுத் திறைசேரியினால் ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளின் அளவு ரூ.மி. 300 ஆகும். இதில் ரூ.மி. 127.9 ஆன ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளதுடன் 2016 ஆம் ஆண்டின் இறுதியில் இதுவரை முன்பள்ளி அபிவிருத்தி நிலையங்கள் 2207 ஐச் சேர்ந்த பிள்ளைகள் 67,988 பேர் இதன் மூலம் பயன்களைப் பெற்றுள்ளனர். 25 மாவட்டங்களினதும் 130 பிரதேச செயலாளர் பிரிவுகளில் அமுல்படுத்தப்பட்டுள்ள இந்த நிகழ்ச்சித்திட்டத்துக்கு 2016 ஆம் ஆண்டின் இறுதி வரை ரூ.மி. 106.429 செலவிடப்பட்டுள்ளது.







பாலர் பாடசாலை பிள்ளைகளுக்கு ஒரு கிளாஸ் பசும்பால் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்





மாத்தளை பகல்நேர பராமரிப்பு நிலையம்






அநுராதபுரம் பகல்நேர பராமரிப்பு நிலையம்

**03. சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கு எதிரான துன்புறுத்தலை தடுப்பது பற்றிய கருத்திட்டம் (மி.ரூ. 700)**

இதன் கீழ் 2016 ஆம் ஆண்டில் ரூ.மி. 19.47 ஒதுக்கப்பட்டுள்ளதுடன், மேற்படி நிர்மாணப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது கிளிநொச்சி, பொலன்னறுவை மற்றும் மாத்தறை மாவட்டங்களின் பகல்நேர பராமரிப்பு நிலையங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளதுடன், நுவரெலியா, மொனராகலை, மட்டக்களப்பு மற்றும் அநுராதபுரம் ஆகிய பகல்நேர பராமரிப்பு நிலையங்களினதும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன. மேற்படி பகல்நேர பராமரிப்பு நிலையங்களையும் விரைவில் திறந்துவைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**.04லமா திறிய பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கு ரூபா -/250வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்**

பாலர் பாடசாலை/ முன்பள்ளிப்பருவ அபிவிருத்தி நிலையங்களின் சேவைகளை மென்மேலும் பலப்படுத்துவதையும், மேம்படுத்துவதையும் நோக்காகக் கொண்டு 2015 வரவு செலவுத்திட்ட பிரேரணைகளின் கீழ் பாலர் பாடசாலைகள் /முன்பராய அபிவிருத்தி நிலையங்களின் ஆசிரியைகளுக்கு ரூபா -/250ஆன கொடுப்பனவை 2015 யூன் மாதம் முதல் செலுத்தத் தீர்மானித்துள்ளதுடன், அதனை அமுல்படுத்தும் பொறுப்பு முன்பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பில் தேசிய மட்டத்தில் இயங்கிவருகின்ற சிறுவர் செயலகத்திடம் கையளிக்கப்பட்டது. அதற்கமைய 2016 ஆம் ஆண்டில் ரூ.மி. 30 இந்த நிகழ்ச்சித்திட்டத்துக்கு ஒதுக்கப்பட்டதுடன், தகைமைபெற்ற ஆசிரியைகள் 4159 பேருக்கு முதல் தவணையின் போதும் 4126 பேருக்கு இரண்டாவது தவணையின் போம் 3636 பேருக்கு மூன்றாவது தவணையின் போதும் என்ற வகையில் ரூ.மி. 11.728 ஆன தொகையைச் செலவிட்டு 2016 ஆம் ஆண்டின் 12 மாதங்களுக்கும் இந்தக் கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளது.

**05 .முன்பராய அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய நிகழ்ச்சித்திட்டம்**

இதன் கீழ் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக ரூ.மி. 50 ஆன ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன.

**I. “செனஹஸதடாக” வீடுகளை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்.**

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கியமான நோக்கம் வீடுகளை அடிப்படையாகக் கொண்ட சூழல் மற்றும் வீட்டில் அன்றாடம் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளின் போது சிறுவர்களை தொடர்புபடுத்திக் கொள்வதனூடாக அவர்களில் ஒட்டுமொத்த அபிவிருத்தியை

ஏற்படுத்துவதாகும். பிரதேச செயலக மட்டத்தில் பெற்றோரை அறிவுறுத்தல், அரச அலுவலர்களை அறிவுறுத்தல், இளைஞர் குழுக்களை அறிவுறுத்தல் போன்ற பணிகள் இதன் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. 2016 ஆம் ஆண்டில் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் 304 நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ.மி. 1.580 ஆகும் என்பதுடன், 281 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், அதன் நிதிசார் முன்னேற்றம் ரூ.மி. 1.474 ஆகும்.

மேலும் இதன் கீழ் மாவட்ட மட்டத்திலான 25 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு ஒரு மாவடத்திற்கு ரூபா 32,000 வீதம் ரூ.மி. 0.8 வழங்கப்பட்டதுடன், மாவட்ட மட்டத்திலான 21 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், அவற்றுக்கான செலவினம் ரூ.மி. 0.664 ஆகும்.

### II. "போஷன மங்பெத்த" உணவு, போஷாக்கு நிகழ்ச்சித்திட்டம்

முன்பள்ளிப் பருவ சிறுவர்களின் உணவு மற்றும் போஷாக்கு தொடர்பாக பெற்றோர், பாடசாலை ஆசிரியர்களை அறிவுறுத்தும் நோக்கத்துடன் பிரதேச செயலாளர் மட்டத்தில் 304 நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக ரூ.மி. 2.432 ஆன ஏற்பாடுகள் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், 2016 ஆம் ஆண்டின் இறுதியில் 278 நிகழ்ச்சித்திட்டங்கள் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் நடாத்தப்பட்டுள்ளதுடன், அதற்காக செலவிடப்பட்ட தொகை ரூ.மி. 2.21 ஆகும்.

### III. மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுக்கள்

ஒவ்வொரு பொறுப்புவாய்ந்த பிரிவினதும் பங்கேற்புடன் சிறுவர்களுக்கு சாதகமான சூழலை உருவாக்குவதற்காக 2016 ஆம் ஆண்டு மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கு ஒதுக்கப்பட்ட மொத்த ஏற்பாடுகளின் அளவு ரூ.மி. 0.75 ஆகும். அதற்கமைய 2016 ஆம் ஆண்டின் இறுதியில் 58 குழுக்களுக்கு ரூ.மி. 0.492 ஆன நிதிசார் முன்னேற்றம் அடையப்பெற்றுள்ளது.



மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டங்களை நடாத்தல்

**IV. முன்பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய தேசிய /பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை நடாத்தல் .**

முன்பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய தேசிய கொள்கைக்கு அமைய (2004) முன்பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய தேசிய மற்றும் பிரதேசக் குழுக் கூட்டங்களை நடாத்தும் பொருட்டு ரூ.மி. 1.192 ஆன ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதற்கமைய தேசிய மட்டத்திலான 3 குழுக்களும், மாகாண மட்டத்திலான 8 குழுக்களும், பிரதேச மட்டத்திலான 491 குழுக்களும் நடாத்தப்பட்டுள்ளதுடன், அதன் செலவினம் ரூ.மி. 0.614 ஆகும்.

**V. முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி அலுலவர்களின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்.**

வெளிக்களத்தில் கடமையாற்றிவருகின்ற மாவட்ட முன்பள்ளிப் பருவ ஒருங்கிணைப்பு அலுவலர்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் சேவையாற்றி வருகின்ற முன் பள்ளிப் பருவ அபிவிருத்தி உதவியாளர்களின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் 143 உம், தேசிய கூட்டங்கள் 04 உம் நடாத்தப்பட்டுள்ளன. இதற்கென ரூ.மி. 0.444 ஆன தொகை செலவிடப்பட்டுள்ளது.

**VI. முன்பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய தேசிய கொள்கையை சட்டமாக மாற்றியமைத்தல்**

முன்பள்ளிப் பருவ அரவணைப்பு, அபிவிருத்தி தொடர்பாக 2004 இல் வெளியிடப்பட்ட தேசிய கொள்கை தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன் இந்த தேசிய கொள்கையை சட்டரீதியாக வலுவூட்டுவதற்கு சட்டமொன்றாக மாற்றியமைக்கும் நோக்கத்துடன், தற்காலத்தின் முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி மற்றும் அரவணைப்புக்கு ஏற்றவாறு தேசிய கொள்கையைத் திருத்தியடைத்து மீள அச்சிடுவதற்கான நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதனை முன்னிட்டு முன்பள்ளிவப் பருவ அபிவிருத்திச் சட்டமூலம் தயார்செய்யப்பட்டு வருகின்றது. இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ.மி. 1.075 ஆகும். இது தொடர்பிலான 3 கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், நிதிசார் முன்னேற்றம் ரூ.மி. 0.915 ஆகும்.

**VII. முன்பள்ளிப் பருவ அரவணைப்பு பற்றிய வலையமைப்பைப் பேணிவருதல்**

இலங்கையில் முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி தொடர்பாக செயற்பட்டு வருகின்ற அரச, அரசார்பற்ற மற்றும் தனியார் துறை நிறுவனங்களையும், ஆட்களையும் தொடர்புபடுத்திக் கொண்டு முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி பற்றிய வலையமைப்பு )ECCD Network) சிறுவர் செயலகத்தில் தாபிக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக ரூ.மி. 0.650 ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய இது தொடர்பான ஆரம்ப கூட்டத் தொடர்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், இதற்கென ரூ. 0.049 ஆன தொகை செலவிடப்பட்டுள்ளது. இது சம்பந்தமான அடுத்தகட்ட கூட்டங்களை எதிர்காலத்தில் நடாத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**VIII. "சரியான ஆரம்பத்துக்காக" முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி நிலையங்களுக்கு ஆகக் குறைந்த தரநியமங்களின் ஆவணத்தை இற்றைப்படுத்தல்.**

முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி நிலையங்களுக்கான ஆகக் குறைந்த தரநியமங்களின் ஆவணத்தை திருத்தியமைத்து அச்சிடுவதற்கு தேவையான ஆரம்ப கட்டப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது தொடர்பிலான இரண்டு நாள் செயலமர்வு நடாத்தப்பட்டுள்ளதுடன், அதற்காக செலவிடப்பட்ட தொகை ரூ.மி. 0.712 ஆகும்.

**.IXமுன்பள்ளிப் பருவ அபிவிருத்தி தரநியமங்களை அறிமுகம் செய்யும் நிகழ்ச்சித்திட்டம்**

எமது நாட்டில் இதுவரை காலம் சிறுவர்களின் அபிவிருத்தியை அளவிடுவதற்கான நியமங்கள் அல்லது சுட்டிகள் காணப்படவில்லை. சிறுவர் செயலகத்தினால் தற்போது நாடளாவிய ரீதியில் ஆராய்ச்சிகள் நடாத்தப்பட்டு சகல மாகாண சபைகளினதும் முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி அதிகார சபை மற்றும் பணியகங்களின் தத்துவமளிக்கப்பட்ட அலுவலர்களின் இணக்கப்பாட்டுடன் "முன்பள்ளிப் பருவ அபிவிருத்தித் தரநியமங்கள்" தயார் செய்யப்பட்டுள்ளன. (வயது 3-5 வரையான தொகுதிகளைச் சேர்ந்த சிறுவர்களுக்கானது) மேற்படி அபிவிருத்தி தர நியமங்கள் 2015 ஆண்டு தேசிய மட்டத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டன. இவை "தேசிய தரநியமங்கள்" எனப் பெயரிடப்பட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்காக தற்போது அமைச்சரவையில் அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
இந்த முன்பள்ளிப் பருவ அபிவிருத்தித் தரநியமங்கள், பாலர் பாடசாலை ஆசிரியர் பயிற்சிக் கையேடாதக் தயார் செய்யப்பட்டு இதனை பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு அறிமுகம் செய்வதற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் அமுல்படுத்தப்படுத்தப்படுகின்றது. அதற்குப் பயிற்றுவிப்பாளர்கள் சிலரும் மாகாண மட்டத்தில் பயிற்றப்படுவதுடன், 2016 ஆம் ஆண்டின் இறுதிவரை 09 மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், தெற்கு, மேற்கு, மத்திய, ஊவா ஆகிய மாகாணங்களில் சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கு 149 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. இதன் நிதிசார் முன்னேற்றம் ரூ.மி. 4.101 ஆகும்.

**X. பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு தேசிய மட்டத்திலான பரீட்சையொன்றை நடாத்தும் முறையியலைத் தயார் செய்தல் மற்றும் பாலர் பாடசாலை டிப்ளோமா பாடநெறிக்கு உதவி வழங்குதல்.**

பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கு தேசிய மட்டத்திலான பரீட்சையொன்றை நடாத்துவது தொடர்பிலான ஆரம்ப முறையியலைத் தயார் செய்வதற்காக அது தொடர்பிலான நிறுவனங்களுடன் ஆரம்ப கட்ட கலந்துரையாடல்கள் இந்த ஆண்டில் நடாத்தி முடிக்கப்பட்டுள்ளன. இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ.மி. 0.05 ஆகும் என்பதுடன், இதுவரை செலவிடப்பட்ட தொகை ரூ. 620.00 ஆகும்.

அடுத்து வரும் ஆண்டுகளில் மேற்படி முறையில் மற்றும் இது சம்பந்தமான நடவடிக்கைகளை மென்மேலும் அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக இலவசமாக நடாத்தப்படுகின்ற பாலர் பாடசாலை டிப்ளோமா பாடநெறிக்கு உதவி வழங்குவதற்காக ரூ.மி. 0.2 ஒதுக்கப்பட்டுள்ளதுடன், அதன் நிதிசார் முன்னேற்றம் ரூ.மி. 0.2 ஆகும்.

**XI. முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி பற்றிய டிப்ளோமா பாடநெறிகளை பதிவுசெய்யும் நிகழ்ச்சித்திட்டம்**

முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி தொடர்பான ஒரு வருட டிப்ளோமா (பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சிகள்) பாடநெறிகள் தேசிய மட்டத்தில் தரம் வாய்ந்ததாக உள்ளதை உறுதிப்படுத்தி சிறுவர் செயலகத்தின் கீழ் பதிவு செய்து கொள்வது இதன் முக்கிய நோக்கமாகும். இதன் கீழ் தேசிய மட்டத்திலான 61 டிப்ளோமா பாடநெறிகள் இதுவரை பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன், இப்பாடநெறியின் முன்னேற்றத்தை ஒழுங்குறுத்தும் பொருட்டு பின்னாய்வு பொறிமுறையும் தயார் செய்யப்பட்டுள்ளது. இதற்காக ரூ.மி. 0.15 ஆன தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் நிதிசார் முன்னேற்றம் ரூ.மி. 0.032 ஆகும்.

**XII. முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி மற்றும் அரவணைப்பு தொடர்பான ஆராய்ச்சி மற்றும் மாநாடு**

முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி மற்றும் அரவணைப்பு தொடர்பிலான ஆராய்ச்சிகள் 5 தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், இது தொடர்பான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. எதிர்வரும் ஆண்டுகளில் இந்த ஆராய்ச்சிகளை நிறைவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**XIII. அருண தக்கின ரட்டா’ சிறுவர்களின் சித்திரக் கண்காட்சியும், செயலமர்வும்**

முன்பள்ளிப் பருவ சிறுவர்களின் ஆக்கங்கள், திறமைகளை மெருகூட்டுவதற்காக வருடாந்தம் நாடளாவிய மட்டத்தில் சித்திரக் கண்காட்சியொன்று நடாத்தப்படுகின்றது. இதில் முழு நாட்டினதும் சகல மாகாணங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் பாடசாலை மாணவர்களின் சித்திர ஆக்கங்கள் பெறப்பட்டு, அவற்றிலிருந்து தெரிவு செய்து கொள்ளும் 500 சித்திர ஆக்கங்களைக் கொண்டதாக கொழும்பில் இந்தக் கண்காட்சி நடாத்தப்பட்டு மாணவர்களுக்கு பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கிவைக்கப்படும். கடந்த ஆண்டுகளிலும் இந்த நிகழ்ச்சித்திட்டம் செப்தெம்பர் மாதத்தில் நடாத்தப்பட்டதுடன், நடைமுறைக் காரணங்களினால் இந்த ஆண்டில் இது அக்டோபர் மாதம் 27 ஆம் திகதி பத்தரமுல்லை “அபேகம” வளவில் நடாத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் ரூ.மி. 4.5 ஆகும் என்பதுடன், அதற்கமைய பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் சித்திர ஆக்கத்துக்கான 331 நிகழ்ச்சிகளை நடாத்துவதற்காக ரூ.மி. 1.986 ஆன ஏற்பாடுகள் விடுவிக்கப்பட்டுள்ளன. பிரதேச மட்டத்தில் நடாத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம்

தெரிவு செய்யப்படுகின்ற தகுதிவாய்ந்த சித்திர ஆக்கங்கள் மூலம் தேசிய மட்டத்திலான “அருண தக்கின ரட்டா” சித்திர செயமர்வு மற்றும் பரிசு வழங்கும் வைபவத்திற்கு சித்திரங்களை தெரிவு செய்துகொள்வதற்கான 25 நிகழ்ச்சித்திட்டங்கள் மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்டுள்ளன. அதற்கமைய இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகையும் செலவிடப்பட்டுள்ளது.



“அருண தக்கின ரட்டா” பிரதேச நிகழ்ச்சித்திட்டம்

### .XIVமுன்பள்ளிப் பருவ அரவணைப்பும் அபிவிருத்தியும் பற்றிய தேசிய வாரம்

2010 ஆம் ஆண்டில் அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் 14 ஆந் திகதி முதல் 20 ஆந் திகதி வரை அமுல்படுத்தப்பட்ட இந்த நிகழ்ச்சித்திட்டம் இந்த ஆண்டில் யூலை மாதம் 14 முதல் 20 வரை மாற்றம் செய்து அமுல்படுத்த அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டது. முன்பள்ளிப் பருவ கொள்கை வகுப்பாளர்கள், பாலர் பாடசாலை மாணவர்கள், பாலர் பாடசாலை ஆசிரியைகள், வெளிக்கள அலுவலர்கள், பெற்றோர், கர்ப்பிணித் தாய்மார் ஆகியோர் இதன் இலக்குக் குழுக்களாவார்கள். இதற்கமைய இலக்குக் குழுக்களுக்கான பயன்களாக பாடசாலைகளுக்கான கற்கை உபகரணங்களை பெற்றுக்கொடுத்தல், மாதிரிக் கிராமங்களின் கீழ் பாலர் பாடசாலைக் கட்டிடங்களை நிர்மாணிக்க உதவி வழங்குதல், அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள், மாணவர்களுக்கான அழகியற்கலை நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற நிகழ்ச்சித்திட்டங்கள் இந்த ஆண்டில் அமுல்படுத்தப்பட்டன. இந்த தேசிய வாரத்தில் ஊடகங்கள் மூலம் முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி பற்றி மக்களை அறிவுறுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இம்முறை “முன்பள்ளிப் பருவ பிள்ளைகள் - நாட்டின் எதிர்கால உயிர்” எனும் தொணிப்பொருளின் கீழ் முன்பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய தேசிய வாரம் கொண்டாடப்பட்டதுடன், இதன் போது அனர்த்தப் பாதுகாப்பு மற்றும் முன்பள்ளிப் பருவ அரவணைப்பு தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டது.

2016 ஆம் ஆண்டுக்கு ரூ.மி. 4.5 ஆன மதிப்பீடு செய்யப்பட்டதுடன், இந்த நிகழ்ச்சித்திட்டத்துக்கு ரூ.மி. 4.474 ஆன தொகை செலவிடப்பட்டுள்ளது. அதற்கமைய, இதுவரை சகல பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் பிரதேச ரீதியான 284 நிகழ்ச்சித்திட்டங்களும் தேசிய ரீதியிலான 07 நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்பட்டுள்ளன.






முன்பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய தேசிய வாரத்தின் நிகழ்ச்சித்திட்டங்கள்

## XV. உலக சிறுவர் தினம்

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு நடாத்தப்படுகின்ற தேசிய நிகழ்ச்சித்திட்டம் கேகாலை புனித ஜோசவ் மகளிர் ஆரம்பப் பாடசாலையில் நடாத்தப்பட்டது. இதன் கீழ் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் பல்வேறு அறிவுறுத்தும் செயலமர்வுகள் மற்றும் பாலர் பாடசாலை மாணவர்களுக்கான ரசணை நிகழ்ச்சித்திட்டங்கள் பல நடாத்தப்பட்டதுடன், ஒரு பிரதேச செயலாளர் பிரிவுக்கு ரூபா 12,000 வீதம் 304 பிரதேச செயலகங்களுக்கு ரூ.மி. 3.648 ஆன ஏற்பாடுகள் விடுவிக்கப்பட்டுள்ளன. இதற்கமைய பிரதேச மட்டத்திலான 289 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், உலக சிறுவர் தின தேசிய நிகழ்ச்சித்திட்டம் பிரதேச மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டங்களுக்கு செலவிடப்பட்டுள்ள தொகை ரூ.மி. 8.052 ஆகும்.












உலக சிறுவர் தின தேசிய வைபவம்

## XVI. முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி நிலையங்கள் /பாலர் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம்

பாலர் பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான கற்கைச் சூழலுக்கு அனுசரணை வழங்குவது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். இதன் கீழ் பாலர் பாடசாலைகளுக்கு விளையாட்டு முற்றங்களைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் அத்தியாவசியமான பாலர் பாடசாலைக் கட்டிடங்களை மறுசீரமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பாலர் பாடசாலை மற்றும் பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியங்களில் விளையாட்டு முற்றங்களை நிர்மாணிப்பதன் கீழ் 2016 ஆம் ஆண்டில் 50 விளையாட்டு முற்றங்கள் நிர்மாணிப்பதற்காக ரூ.மி. 2.5 ஆன ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், மேற்படி தொகையிலிருந்து பாலர் பாடசாலைகள், முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி நிலையங்களில் 38 மற்றும் பொலிஸ் நிலையங்களிலுள்ள சிறுவர் மற்றும் மகளிர் பணியங்களில் 12 என்ற வகையில் 50 விளையாட்டு முற்றங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இதற்காக ரூ.மி. 2.4949 ஆன தொகை செலவிடப்பட்டுள்ளது.

பாலர் பாடசாலைக் கட்டிடங்களை புனரமைக்கும் பணிகளின் கீழ் 2016 ஆம் ஆண்டில் பாலர் பாடசாலைகள், முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி நிலையங்கள் 10 இன் கட்டிடங்களை புனரமைக்கும் பணிகளுக்காக ரூ.மி. 5 ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய இரத்தினபுரி, களுத்துறை, கண்டி, அம்பாறை, ஹம்பாந்தோட்டை, கிளிநொச்சி, குருநாகல், காலி, வவுனியா மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள பாலர் பாடசாலைக் கட்டிடங்கள் புனரமைக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகையும் செலவிடப்பட்டுள்ளது.

## XVII. முன்பள்ளிப் பருவ அபிவிருத்திக்கான மாதிரிக் கிராமங்கள் கருத்திட்டம்

நாட்டின் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள கிராமங்களில் வாழும் மக்களை முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி பற்றிய அறிவும், உணர்வும்மிக்கவர்களாக மாற்றியமைக்கும் நோக்கத்துடன், இந்தக் கிராமங்கள் ''மாதிரி முன்பள்ளிப் பருவ அபிவிருத்திக் கிராமங்களாக'' அபிவிருத்தி செய்யப்படுகின்றன.

2016 ஆம் ஆண்டில் இவ்வாறான 6 கிராமங்களைத் தாபிப்பதற்காக ரூ.மி. 2 ஒதுக்கப்பட்டுள்ளதுடன் ஆண்டின் இறுதியில் மேற்படி மதிப்பீட்டுத் தொகை முழுவதும் செலவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 06 மாதிரிக் கிராமங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன், மேற்படி கிராமங்களின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இம்முறை மேற்படி மாதிரிக் கிராமங்கள் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் அபிவிருத்திப் பிரிவின் மகளிர் மாதிரிக் கிராமங்களுடன் இணைந்து அமுல்படுத்தப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும். மேற்படி கிராமங்கள் அநுராதபுரம், பதுளை, பொலன்னறுவை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் தாபிக்கப்பட்டுள்ளதுடன், நிதிசார் முன்னேற்றம் ரூ.மி. 0.8033 ஆகும்.

## XVIII. அவசர சந்தர்ப்பங்களுக்கான முன்பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய நிகழ்ச்சித்திட்டம்

முன் பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றி ஆரம்பத்தில் திட்டமிடாத திடீரென ஏற்படுகின்ற தேவைகள் மற்றும் அவ்வவ் சந்தர்ப்பங்களில் சமர்ப்பிக்கப்படுகின்ற கோரிக்கைகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளவென ரூ.மி. 2.5 ஆன ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதன் போது யுனிசெவ் உதவியின் கீழ் சுமார் ரூ.மி. 13 ஆன தொகையிலிருந்து கொலன்னாவை பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பொருட்களினாலான உதவிகள் வழங்கப்பட்டதுடன், சிறுவர் செயலகத்தினால் இதற்கென ரூபா 33,905.00 செலவிடப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் ஏனைய திடீர் அனர்த்தங்களினால் பாதிக்கப்படுகின்ற அத்தியாவசியமாக மேற்கொள்ள வேண்டிய புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு இந்த ஏற்பாடுகள் பெற்றுக் கொடுக்கப்படும். இதன் கீழ் பெலிஅத்த பிரதேச செயலாளர் பிரிவில் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பாலர் பாடசாலையொன்றை புனரமைக்கவென ரூ.மி. 0.8 ஆன ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைய 2016 ஆம் ஆண்டில் முன்பள்ளிப் பருவ அவசர சந்தர்ப்பங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகையில் ரூ.மி. 2.2 ஆன தொகை செலவிடப்பட்டுள்ளது.